# கற்றல் குறைவான மாணவர்களுக்கான கையேடு

# பத்தாம் வகுப்பு – தமிழ்

**ஆக்கம்**

இரா.தாமோதரன்,
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்)
அ.மே.நி.பள்ளி,
மெலட்டூர் 614301
தஞ்சை மாவட்டம்
**raa.damodaran@gmail.com**

# தமிழ் முதல்தாள்– வினாத்தாள் வடிவமைப்பு

| | |
|---|---|
| **பிரிவு – I (ஒரு மதிப்பெண் வினாக்கள் வினா எண் 1-20 மொத்தம் 20 மதிப்பெண்கள்)** | |
| பகுதி - 1 (வினா எண் 1–6) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | 6X1= 6 |
| பகுதி - 2 (வினா எண் 7–12) கோடிட்ட இடத்தை நிரப்புக | 6X1= 6 |
| பகுதி - 3 (வினா எண் 13–16) பொருத்துக | 4X1= 4 |
| பகுதி - 4 (வினா எண் 17–20) வினா அமைக்க | 4X1= 4 |
| **பிரிவு – II (இரண்டு மதிப்பெண் வினாக்கள் வினா எண் 21-34 மொத்தம் 20 மதிப்பெண்கள்)** | |
| பகுதி - 1 (வினா எண் 21–27) குறுவினா – செய்யுள் (ஏழில் ஐந்தனுக்கு மூன்று வரியில்) | 5X2=10 |
| பகுதி - 2 (வினா எண் 28–34) குறுவினா – உரைநடை (ஏழில் ஐந்தனுக்கு மூன்று வரியில்) | 5X2=10 |
| **பிரிவு – III (நான்கு மதிப்பெண் வினாக்கள் வினா எண் 35-44 மொத்தம் 24 மதிப்பெண்கள்)** | |
| பகுதி - 1 (வினா எண் 35–39) சிறுவினா – செய்யுள் (ஐந்தில் மூன்றனுக்கு ஆறு வரிகளில்) | 3X4=12 |
| பகுதி - 2 (வினா எண் 40–44) சிறுவினா – உரைநடை (ஐந்தில் மூன்றனுக்கு ஆறு வரிகளில்) | 3X4=12 |
| **பிரிவு – IV (பொருளுணர்தல் வினா வினா எண் 45-46 மொத்தம் 10 மதிப்பெண்கள்)** | |
| பகுதி - 1 (வினா எண் 45) பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுதல் (ஐந்து வினா) | 5X1= 5 |
| பகுதி - 2 (வினா எண் 46) உரைநடையைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்(ஐந்து வினா) | 5X1= 5 |
| **பிரிவு – V (நெடுவினா மற்றும் மனப்பாடப்பகுதி வினா எண் 47-49 மொத்தம் 26 மதிப்பெண்கள்)** | |
| பகுதி - 1 (வினா எண் 47) நெடுவினா – செய்யுள் (இரண்டில் ஒன்று) | 1X8= 8 |
| (வினா எண் 48) நெடுவினா – உரைநடை (இரண்டில் ஒன்று) | 1X8= 8 |
| பகுதி - 2 (வினா எண் 49) செய்யுள் வடிவில் எழுதுக | |
| அ) ..... என தொடங்கும் குறள் ஆ) ...... என முடியும் குறள் | 2+2= 4 |
| இ) பொது மனப்பாடப்பகுதி (6 மதிப்பெண்கள்) | 3+3= 6 |
| | மொத்த மதிப்பெண்கள் 100 |

## தமிழ் முதல் தாள்

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
**(வினா எண் 1-6)**
**(6 மதிப்பெண்)**

1. திருக்குறளைப் போற்றிப்பாடும் நூல் **திருவள்ளுவமாலை**
2. திருக்குறள் **குறள்** வெண்பாக்களால் ஆனது.
3. இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப் பாடியவர் **பாரதிதாசன்**
4. ஏலாதி **பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்** ஒன்று
5. கணிமேதாவியாரின் காலம். **கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு**
6. மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள் **திரிகடுகம், ஏலாதி**
7. இளங்கோவடிகள் **சேர** நாட்டைச் சேர்ந்தவர்.
8. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர் **பாரதியார்**
9. குடும்ப விளக்கு **பாரதிதாசன்** படைப்புகளுள் ஒன்று.
10. பாரதிதாசனார் **புரட்சிக் கவிஞர்** என அழைக்கப்படுகிறார்.
11. கம்பராமாயணம் **ஆறு** காண்டங்களைக் கொண்ட நூல்
12. சரசுவதி அந்தாதி **கம்பர்** இயற்றிய நூல்களுள் ஒன்று.
13. கம்பரைப் புரந்தவர் **சடையப்ப வள்ளல்.**
14. நல் என்னும அடைமொழி பெற்ற நூல் **நற்றிணை**
15. நற்றிணையைத் தொகுப்பித்தவர் **பன்னாடு தந்த மாறன் வழுதி**.
16. நற்றிணை **எட்டுத்தொகை** நூல்களைச் சார்ந்தது.

17. சேக்கிழார் பெருமான் அருளியது **பெரியபுராணம்**
18. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் **அப்பூதியடிகள்**
19. பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப் பாடியவர் **மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்.**
20. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் **மூத்த அறிவுடையார்**
21. அரியவற்றுள் எல்லாம் அரிது **பெரியார்** பேணித் தமராக் கொளல்.
22. முதலிலார்க்கு **ஊதியம்** இல்லை.
23. திருநாவுக்கரசர் காலம் **கி.பி.7** ஆம் நூற்றாண்டு.
24. நாமார்க்கும் குடியல்லோம் என்னும் பாடல் **பாரதியாரை** அச்சமில்லை அச்சமில்லை எனப் பாடத் தூண்டியது.
25. சீறாப்புராணம் **மூன்று** காண்டங்களை உடையது.
26. “கேழல்“ என்பதன் பொருள் **பன்றி**
27. கலித்தொகை **எட்டுத்தொகை** நூல்களுள் ஒன்று.
28. நெய்தல்கலியைப் பாடியவர் **நல்லந்துவனார்**
29. போற்றாரைப் பொறுத்தல் என்பது **பொறை** எனப்படும்.
30. பெருமாள் திருமொழியில் **நூற்றைந்து** பாசுரங்கள் உள்ளன.
31. குலசேகர ஆழ்வார் பாடல் **முதலாயிரத்தில்** உள்ளது.
32. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் **பாவாணர்**
33. இன்றைய மதுரையில் **மூன்றாம்** தமிழ்ச்சங்கம் இருந்தது.
34. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர் **பெரியார்.**
35. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று **சொத்துரிமை இல்லாமை**
36. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் **பொருளியல்** பேராசிரியராகப் பணியாற்றினார்.
37. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது **பாரத ரத்னா.**
38. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை **பேச்சுக் கலை**
39. தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர் **திரு.வி.க.**
40. பண்ணொடு தமிழொப்பாய் எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல் **தேவாரம்.**
41. உலகம் என்னும் தமிழ்ச்சொல் **உலவு** என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.
42. தமிழர்கள் நிலத்தை **ஐந்து** வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
43. காந்தியடிகள் **அரிச்சந்திரன்** நாடகத்தைப் பார்த்து உண்மையே பேசவேண்டும் என்று உறுதி பூண்டார்.
44. பகைவனிடம் அன்பு காட்டு எனக் கூறிய நூல் **பைபிள்**
45. அறநெறியாகப் போற்றப்படவேண்டியவை **அன்பு, அருள்.**
46. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் **பெரியபுராணம்**
47. வள்ளலாரின் இயற்பெயர் **இராமலிங்கர்.**
48. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி **பன்னிரண்டாம் வகுப்பு.**
49. விரல்கள் பத்தும் மூலதனம் என்னும் பாடலின் ஆசிரியர் **தாராபாரதி.**

## கோடிட்ட இடத்தை நிரப்புக.
**(வினா எண் 7-12)**
**(6 மதிப்பெண்)**

1. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் **திருவாதவூர்.**
2. மாணிக்கவாசகர் பாடல்கள் **எட்டாம்** திருமுறையில் இடம்பெற்றுள்ளன.
3. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் **திருப்பெருந்துறையில்** உள்ளது.
4. மாணிக்கவாசகர் **அரிமர்த்தன பாண்டிய மன்னனிடம்** தலைமையமைச்சராகப் பணியாற்றினார்
5. ஜி.யு.போப் திருவாசகத்தை **ஆங்கில** மொழியில் மொழிபெயர்த்தார்.
6. திருவாசகத்திற்கு உருகார் **ஒரு வாசகத்திற்கும்** உருகார்.
7. கைதான் நெகிழ விடேன். இதில் நெகிழ என்பது **தளர** என்னும் பொருளில் வந்துள்ளது.
8. ஒழுக்கத்தின் எய்துவர் **மேன்மை** இழுக்கத்தின் எய்துவர் **எய்தாப்** பழி.
9. இறுவரை காணின் **கிழக்காம்** தலை
10. மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும் சொல் **உரவோர்.**
11. இரட்டைக் காப்பியம் என்பன சிலப்பதிகாரமும் **மணிமேகலையும்** ஆகும்..
12. நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் **பன்னிரண்டு அடிப்** பேரெல்லையும் கொண்ட நூல்.

13. அரி என்னும் சொல்லின் பொருள் **நெற்கதிர்**
14. கண்ணகனார் **கோப்பெருஞ்சோழனின்** அவைக்களப் புலவர்களுள் ஒருவர்.
15. புறநானூறு **எட்டுத்தொகை** நூல்களுள் ஒன்று.
16. போலிப்புலவர்கள் தலையில் குட்டுபவர் **அதிவீரராம பாண்டியன்**
17. நால்வகைப் பாக்களும் வயலுக்கு **வரப்புகளாக** அமைந்துள்ளன.
18. இல்லாரை **எல்லாரும்** எள்ளுவர்.
19. அறனீனும் இன்பமும் ஈனும் **திறனறிந்து** தீதின்றி வந்த பொருள்..
20. திருநாவுக்கரசரின் தமக்கையார் **திலகவதியார்** ஆவார்.
21. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் **தேவாரம்** என வழங்கப்படுகிறது.
22. தாண்டகவேந்தர் என அழைக்கப்படுபவர் **திருநாவுக்கரசர்.**
23. சீறாப்புராணத்தை இயற்றியவர் **உமறுப்புலவர்**
24. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் **சீதக்காதி**
25. கலம்பகம் **தொண்ணூற்றாறு** வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று.
26. பணை என்னும் சொல்லின் பொருள் **மூங்கில்.**
27. தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் **குடி** போன்றிருந்தேனே.
28. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் **பெருமாள் திருமொழி** குலசேகரர் பாடியதாகும்.
29. தமிழர் மனித வாழ்வை **அகம், புறம்** எனப் பிரித்தனர்.
30. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசியமொழி **தமிழ்**.
31. 2004 ஆம் ஆண்டு **அக்டோபர்** திங்களில் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.
32. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் **மாக்சுமுல்லர்.**
33. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள **பெருநோய்** ஒன்று உண்டு.
34. பெரியார் சமூக முரண்களையும் **மூடக்கருத்துகளையும்** எதிர்த்தவர்.
35. வெறும் பேச்சுக்கும் **மேடைப்** பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
36. பேச்சு முடிவில் **சுருக்கத்தைக்** கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.
37. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் **இயக்குநர்** என அழைப்பர்.
38. படப்பிடிப்புக் கருவியை **நகர்த்தும் வண்டியில்** பொருத்துவதும் உண்டு.
39. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு **வேடிக்கையாக** இருக்கும்.
40. இலெமூரியாவை **மனித** நாகரிகத் தொட்டில் என்பர்.
41. தனக்குவமையில்லா ஒரு **தனி இனம்** தமிழ் இனம்.
42. காந்தியடிகள் **சிரவண பிதுர்த்தி** என்னும் நாடக நூலைப் படித்தார்.
43. இன்னா செய்தார்க்கும் என்னும் திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் **தால்சுதாய்.**
44. இராமலிங்கர் சத்திய தருமசாலையை நிறுவிய இடம் **வடலூர்**
45. இராமலிங்கர் தமிழ் மொழியே **இறவாநிலை** தரும் என்று கருதினார்.
46. சங்க காலத்தில் பெண்கள் **கடல்** கடந்து செல்லக்கூடாது.
47. நாள்தோறும் கல்வியில் **புதுப்புதுத் துறைகள்** உருவாகிக் கொண்டிருக்கின்றன.
48. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் **எழுத்துத்** தேர்வும் உண்டு.

**பொருத்துக**
**(வினா எண் 13-16)**
**(4 மதிப்பெண்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | விரை | - | **மணம்** |
| | கழல் | - | **அணிகலன்** |
| | ததும்பி | - | **பெருகி** |
| | மெய் | - | **உடல்** |
| 2. | இடர் | - | **துன்பம்** |
| | நாவாய் | - | **படகு** |
| | இறை | - | **தலைவன்** |
| | இந்து | - | **நிலவு** |

| | | | |
|---|---|---|---|
| 3. | செறு | - | **வயல்** |
| | வித்து | - | **விதை** |
| | யாணர் | - | **புதுவருவாய்** |
| | வட்டி | - | **பனையோலைப்பெட்டி** |
| **4.** | மேதி | - | **எருமை** |
| | சந்தம் | - | **அழகு** |
| | கோதில் | - | **குற்றமில்லாத** |
| | அங்கணர் | - | **சிவன்** |
| **5.** | கான் | - | **காடு** |
| | உழுவை | - | **புலி** |
| | மடங்கல | - | **சிங்கம்** |
| | எண்கு | - | **கரடி** |
| **6.** | பண்பு | - | **பாடறிந்து ஒழுகல்** |
| | அன்பு | - | **தன்கிளை செறாஅமை** |
| | அறிவு | - | **பேதையார் சொல் நோன்றல்** |
| | செறிவு | - | **கூறியது மறாமை** |
| 7. | ஈஸ்ட்மென் | - | **படச்சுருள்** |
| | எடிசன் | - | **ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி** |
| | எட்வர்ட் மைபிரிடச | - | **இயக்கப்படம்** |
| | வால்ட் டிஸ்னி | - | **கருத்துப்படம்.** |
| **8.** | சத்தியசோதனை | - | **காந்தியடிகள்** |
| | பகவத் கீதை | - | **இந்து சமய நூல்** |
| | திருக்குறள் | - | **திருவள்ளுவர்** |
| | பைபிள் | - | **கிறித்துவ சமய நூல்** |
| **9.** | வினையே ஆடவர்க்கு உயிர் | - | **குறுந்தொகை** |
| | முந்நீர் வழக்கம் மகடூஉ வோ டில்லை | - | **தொல்காப்பியம்** |
| | உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் | - | **திருமூலர்** |
| | விரல்கள் பத்தும் மூலதனம் | - | **தாராபாரதி.** |

**விடைக்கேற்ற வினா அமைக்க**
**(வினா எண் 17-20)**
**(4 மதிப்பெண்)**

1. பெண்கள் உரிமைப் பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியர் பெரியார்.
**பெண்கள் உரிமைப் பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியர் யார்?**
2. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.
**பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தவர் யார்?**
3. செய்திப் படங்களின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்
**எப்படங்களின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்?**
4. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
**திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது?**
5. தமிழர்கள் அரபு நாட்டுடனும் யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்புகொண்டிருந்தார்கள்
**தமிழர்கள் எந்தெந்த நாட்டுடன் வாணிகத் தொடர்புகொண்டிருந்தார்கள்?**

6. காந்தியடிகள் பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்
**காந்தியடிகள் பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் என்று எதைக் கருதினார்?**
7. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல்வேண்டும்.
**இளைஞர்களின் உள்ளத்தில் எத்தகைய பற்றுகள் வளரும் வகையில் கல்வி அமைதல்வேண்டும்?**
8. இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள் இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.
**இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள் இளங்கலைக் எக்கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் ஆசிரியர் பணியில் சேரலாம்?**

**பொதுத்தேர்வு வினாக்கள்**

9. தமிழர் மனித வாழ்வை அகம், புறம் எனப் பிரித்தனர்.
**தமிழர் மனித வாழ்வை எவ்வாறு பிரித்தனர்?**
10. மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.
**எப்பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது?**
11. இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் வடலூர்.
**இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் எது?**
12. தொடக்கம், இடைப்பகுதி, முடிவு பேச்சின் முக்கூறுகள்
**பேச்சின் முக்கூறுகள் யாவை?**
13. உலக இலக்கியங்களில் முதன்மை பெற்றவை சங்க இலக்கியங்கள்
**உலக இலக்கியங்களில் முதன்மை பெற்றவை எவை?**
14. இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்
**மனித நாகரிகத் தொட்டில் எது?**
15. இடைநிலை ஆசிரியர் பயிற்சி ஈராண்டுகள் ஆகும்.
**இடைநிலை ஆசிரியர் பயிற்சி எத்தனை ஆண்டுகள்?**
16. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம்.
**நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது எது?**
17. ஆசிரியர் என்பவர் அறிவுக் கடலாக மட்டுமின்றி, அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும்.
**ஆசிரியர் எப்படி விளங்கவேண்டும்?**
18. இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றவை.
**இலக்கியக்கூறுகள் எதைப் போன்றவை?**
19. திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் தால்சுதாய்
**திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் யார்?**
20. வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
**வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் எது மலரும்?**
21. அறிவு அற்றம் காக்கும் கருவி என்றார் திருவள்ளுவர்
**திருவள்ளுவர் அறிவை என்னவென்று கூறினார்?**
22. இலக்கணம் வகுத்தபின்பே இலக்கியம் தோன்றியது
**இலக்கியம் எதன்பின் தோன்றியது?**
23. தமிழ் மொழியே இறவாநிலை தரும் என்று வள்ளலார் கூறினார்.
**தமிழ்மொழி எது தரும் என்று வள்ளலார் கூறினார்?**
24. தொழில்நுட்பப்பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.
**எதில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?**

25. தமிழர்கள் நிலத்தை ஆறுவகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
**தமிழர்கள் நிலத்தை எத்தனை வகையாகப் பிரித்துக்காட்டியிருக்கிறாரக்ள்?**

26. பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.
**பரிதிமாற்கலைஞர் எம்மொழிக்கு இலக்கணம் வகுத்தார்?**

27. 1918இல் மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.
**1918இல் மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் எப் பேராசிரியராகப் பணியாற்றினார்?**

28. வள்ளலாரின் இயற்பெயர் ராமலிங்கம்.
**வள்ளலாரின் இயற்பெயர் என்ன?**

29. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி மேனிலைக்கல்வித் தேர்ச்சி ஆகும்.
**பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி எது?**

30. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை பேச்சுக்கலை
**நுண்ணிய நூல் பல கற்றவர்க்கு அமைந்த அரிய கலை எது?**

31. இராமலிங்கர் இறையருள் பெற்ற திருக்குழந்தை என்று பாராட்டப்பட்டார்
**இராமலிங்கர் எவ்வாறாகப் பாராட்டப்பட்டார்?**

32. உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன.
**உலகில் எத்தனை மொழிகள் உள்ளன?**

33. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இரு கண்களாக்க் கருதினார் எம்.ஜி.ராமச்சந்திரன்.
**எவற்றைத் தம் இரு கண்களாக எம்.ஜி.ராமச்சந்திரன் கருதினார்?**

34. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமாகும்.
**திரைப்படம் எடுப்பதனைவிட எப்படம் எடுப்பது கடினமாகும்?**

## குறுவினாக்கள் (2 மதிப்பெண்)

***செய்யுட்பகுதி***

**(இயல் 1,3,5,6,7,9)**

**(வினா எண் 21-27)**

**1. கம்பர் – சிறு குறிப்பு வரைக.**

1. **தேரழுந்தூர்** என்னும் ஊரில் பிறந்தவர்.
2. இவர் வாழ்ந்த காலம் **கி.பி.பன்னிரெண்டாம்** நூற்றாண்டு
3. இவரைத் திருவெண்ணெய் நல்லூர்ச் **சடையப்ப வள்ளல்** ஆதரித்தார்.
4. **கம்பராமாயணம், ஏர் எழுபது, சிலை எழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம்** ஆகியவற்றைக் கம்பர் இயற்றியுள்ளார்.
5. **கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், ஒண்பாவிற்கு உயர் கம்பன், கல்வியில் சிறந்த கம்பன்** – ஆகிய தொடர்கள் கம்பரின் சிறப்பை எடுத்துரைப்பன.

**2. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை? யாருக்குக் கொண்டு சென்றான்?**

1. **தேன், மீன்**
2. **இராமனுக்குக்**கொண்டு சென்றான்.

**3. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான்?**

1. இருள்போன்ற நீண்ட முடியுடைய **தலை மண்ணில் படிய, கீழே விழுந்து**, வணங்கினான்.
2. பின் எழுந்து, **வாயைக் கையால் பொத்தி, உடலை வளைத்து அடக்கமாக** நின்றான்.

**4. குகனின் வேண்டுகோள் யாது?**

**ஐயனே தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன்** என்று குகன் வேண்டினான்.

**5. அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம் – யார், யாரிடம் கூறியது?**

**இராமன் குகனிடம்** கூறியது.

**6. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?**

1. **காமம், பொய், களவு, சினம் ஆகிய குற்றங்கள் அற்றவர்**
2. **சிவபக்தி மிக்கவர்**
3. **திருநாவக்கரசரிடம்** பேரன்பு உடையவர்.

**7. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார்?**

தம் வீட்டிலுள்ள,

1. **அளவைக் கருவிகள்**
2. **துலாக்கோல்**
3. **மக்கள்**
4. **பசுக்கள்**
5. **எருமைகள்**
6. **மற்றுமுள்ள எல்லா பொருள்கள்**

என எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார்.

**8. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?**

**“நீவிர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் உம்பெயர் எழுதாமல் வேறு ஒருவர் பெயர் எழுதிய காரணம் என்ன? சொல்வீராக”** என்று திருநாவுக்கரசு வினவினார்.

**9. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார்?**

1. **கைம்மலர்கள் தலைமேல்** குவிந்தன.
2. கண்களில் **ஆனந்தக்கண்ணீர் பெருகி** வழிந்தது.
3. **உரை** தடுமாறியது.
4. உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிய, **தரையில் வீழ்ந்தார்**.
5. திருநாவுக்கரசரின் திருவடித் தாமரைகளைத் **தலையால் வணங்கினார்**.

**10. மூத்த திருநாவுக்கரசுக்கு நேர்ந்ததென்ன?**

**வளமான வாழை இளங்குருத்தினை அரியும்போது, ஒரு பாம்பு, கூரிய பற்களால், அவன் உள்ளங்கையைத் தீண்டியது.**

**11. திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசரை எங்ஙனம் உயிர்த்தெழச் செய்தார்?**

சிவபெருமானை அருளும்படி வேண்டி, **“ஒன்றுகொலாம்”** எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி, பாம்பின் விடத்தைப் போக்கி அருளினார்.

**12. நும்பேர் எழுதாதே வேறொருவர் பெயர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்? - யார், யாரிடம் கூறியது?**

**திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம்** கூறினார்.

**13. இப்போது இங்கு அவன் உதவான் – யார், யாரிடம் கூறியது?**

**அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம்** கூறினார்.

**14. வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை?**

வயலின் வரப்புகளாக,

1. **வெண்பா**
2. **ஆசிரியப்பா**
3. **கலிப்பா**
4. **வஞ்சிப்பா**

ஆகியவை கூறப்படுகின்றன.

**15. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடுதூது கூறுவன யாவை?**

வயல் தரும் விளைவுகளாக,

1. **அறம்**
2. **பொருள்**
3. **இன்பம்**
4. **வீடு**

எனத் தமிழ்விடுதூது கூறுகிறது.

**16. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?**

1. **அதிவீரராம பாண்டியன்**
2. **வில்லிப்புத்தூரன்**
3. **ஒட்டக்கூத்தன்**

ஆகியோர் போலிப்புலவர்களைத் தண்டிப்போர் ஆவர்.

**17. வன்மையுள் எல்லாந் தலையாயது எது?**

அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தல் தலையாயது ஆகும்.

**18. யாருக்குப் பகைவராலும் தீங்கு செய்ய இயலாது?**

அறிவில் சிறந்த பெரியோரைச் சார்ந்து நடப்பவருக்குத் தீங்கு செய்ய இயலாது.

**19. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்?**

பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக்கொள்ளாத அரசன் ஆவான்.

**20. நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மையது?**

பலரைப் பகைத்துக்கொள்வதைவிடப் பல மடங்கு தீமையானது.

**21. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது?**

பொருட்செல்வம் ஆகும்.

**22. பகைமை இருளைப் போக்குவது எதுவென வள்ளுவர் கூறுகிறார்?**

செல்வம் என்னும் அணையா விளக்கு ஆகும்.

**23. வேந்தற்குரிய பொருள்கள் எவை?**

1. அரசுரிமையால் வந்த பொருள்
2. வரிப்பொருள்
3. திறைப் பொருள்

**24. தேவாரம் – பொருள் எழுதுக.**

தெய்வத்திற்குச் சூட்டப்பெற்ற பாமாலை ஆகும்.

**25. சிவபெருமான் எத்தன்மையன் என நாவுக்கரசர் கூறுகிறார்?**

1. எவர்க்கும் ஆட்படாதவன்
2. அழகிய வெண்சங்கினைக் காதில் குழையாக அணிந்தவன்

**26. ஆற்றுதல் என்பது யாது?**

வருந்தி வந்தவர்க்கு உதவுதல் ஆகும்.

**27. பண்பு எனப்படுவது யாது?**

சான்றோர்வழி அறிந்து வாழ்தல் ஆகும்.

**28. அறிவு எனப்படுவது யாது?**

அறிவற்றவர் சொல் பொறுத்தல் ஆகும்.

**29. கலம்பக நூல்களுள் முதல்நூல் எது?**

நந்திக் கலம்பகம் ஆகும்.

**30. கலம்பக உறுப்புகள் நான்கனை எழுதுக.**

1. தழை
2. தவம்
3. சித்து
4. களி

**31. நந்திக் கலம்பகம் யார்மீது பாடப்பெற்றது?**

பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன்மீது பாடப்பெற்றது.

**32. நந்திவர்மன் வீரம் எத்தகையது?**

நந்திவர்மனின் தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்காத அரசர், தேவர் உலகத்தை ஆள்பவர் ஆவர்.

**33. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?**

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகும்.

**34. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர்?**

1. வடமொழி 2. தென்மொழி ஆகியவற்றில் வல்லவர்.

# உரைநடைப் பகுதி

## (வினா எண் 28-34)

(இயல் – 1,5,6,7,8,9,10)

1. **மொழிமாற்றம் என்றால் என்ன?**

   ஒரு மொழிப்படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைத்தல் ஆகும்.

2. **கல்விப்படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை?**
   1. பல்வகை விலங்குகளின் வாழ்க்கை
   2. பன்னாட்டு மக்களின் வாழ்க்கை

3. **திரைப்படச்சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?**
   1. செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
   2. எதிர்ச்சுருள் எனப்படும்.
   3. ஒலி, ஒளி ஆகியவற்றைத் தனித்தனியாக அமைப்பர்.

4. **கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?**
   1. பஃறுளி ஆறு
   2. குமரி மலை

5. **ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?**
   1. மதுரைக்காஞ்சி
   2. பட்டினப்பாலை

6. **ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக.**

   ஞால் என்பதற்குத் தொங்குதல் என்று பொருள். எவ்விதப் பற்றுக்கோடுமின்றி அண்ட வெளியில் உலகம் தொங்குவதால், ஞாலம் எனப்படுகிறது.

7. **கண்ணிடத்து அப்பியவர் யார்? இதில் கூறப்படும் செய்தி யாது?**
   1. கண்ணிடத்து அப்பியவர் கண்ணப்பன்.
   2. ஊனுக்கு ஊன்

8. **காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது?**
   1. தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை
   2. தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்
   3. உண்மைப் பொருண்மை உண்டு

9. **காந்தியடிகளக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை?**
   1. அன்பு
   2. உண்மை
   3. உறுதி
   4. இன்னா செய்யாமை

10. **காந்தியடிகள் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?**
    1. கதர் இயக்கம்
    2. மது விலக்கு
    3. தீண்டாமை ஒழிப்பு

11. **காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?**
    1. பகட்டான வாழ்க்கையைப் பாவம் என்கிறார் காந்தி.

12. **எவற்றை அறநெறியாகப் போற்றவேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்?**
    1. அன்பு
    2. அருள்
    3. எளிமை

13. **இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?**
    1. இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வுதான்.
    2. அந்தந்த கிராமங்களின் வாழ்வு. அந்த நாட்டின் உழவர்கள், இளைஞர்கள் கையில்தான் உள்ளது.

**14. இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார்?**

1. **மருதூரில்** பிறந்தார்.
2. **05.10.1823 அன்று** பிறந்தார்.

**15. இராமலிங்கர் புதுநெறிகண்ட புலவர் எனப் போற்றப்படக்காரணம் என்ன?**

**வடலூரில் சோதித் தரிசனப் புதுமையைப்** புகுத்தியதால் **புதுநெறிகண்ட புலவர்** எனப் போற்றப்பட்டார்.

16. **வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகள் இரண்டு கூறு**

1. **ஏழைகள் வயிறு எரியச் செய்யாதே.**
2. **தாய் தந்தை மொழியைத் தள்ளி நடக்காதே.**

**17. சத்திய தருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?**

**சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தவர்க்கெல்லாம்** உணவிட்டார்.

**18. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல்வேண்டும்?**

**மேனிலைக்கல்வியில் தேர்ச்சி** பெற்றிருத்தல்வேண்டும்.

**19. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?**

1. **உயிரித் தொழில்நுட்பத்துறை**
2. **நுண்ணியல்தொழில்நுட்பத்துறை**

**20. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கனை எழுதுக.**

1. **தமிழ்** (இளங்கலை)
2. **ஆங்கிலம்** (இளங்கலை)
3. **கணிதம்** (இளம் அறிவியல்)
4. **வரலாறு** (இளங்கலை)

ஆகியன ஆகும்.

**21. இடைநிலையாசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.**

1. **மேனிலைக் கல்வி தேர்ச்சி** அடைந்திருக்கவேண்டும்.
2. **இரண்டாண்டுகள் பயிற்சி** நடைபெறும்
3. **இரண்டாண்டுகள் பயிற்சி முடித்துத் தேர்ச்சி பெற்றபின், இடைநிலையாசிரியராகப்** பணிபுரியலாம்.

## சிறு வினாக்கள் (4 மதிப்பெண்)

**(வினா எண் 35-39)**

***<u>செய்யுட்பகுதி</u>***

(இயல் – 2,3,4,8,10)

1.**கம்பராமாயணம் – சிறுகுறிப்பு வரைக.**

**கம்பராமாயணம்**

1. **வான்மீகி ராமாயணத்தைத் தழுவிக் கம்பர்** இயற்றினார்
2. **பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம்** என ஆறு காண்டங்களை உடையது.
3. **பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணத்தை** முழுமையாகப் பெற்றது
4. **பொருள், அணி, நடை** ஆகியவற்றால் சிறந்தது.
5. **கற்போர்க்கு இனிமை தரும் கவிச்சுவை** நிறைந்தது.
6. **சொற்சுவையும் பொருட்சுவையும் தமிழ்ப்பண்பாடும்** மிளிர்ந்தது.

இவையே கம்பராமாயணம் பற்றிய சிறுகுறிப்புகள் ஆகும்.

**2.சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன?**

**குகனைப்பற்றி இராமன்**

1. இவன் **நம்மிடத்து நீங்காத அன்புடையவன்**
2. **எல்லாவற்றிலும் இனிய நண்பனே! இவ்விடத்தில் எம்மொடு இருப்பாயாக!**

என்று குகனைப் பற்றி இராமன் கூறினார்.

**3.விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?**

**இராமன் கூறியவை**

1. **அன்பினால் எழுந்த பரிவின்** காரணமாகக் குகன் கொண்டு வந்த **இப்பொருள்கள் கிடைத்தற்கரியன.**
2. **அமுதத்தைவிடச்** சிறந்தன.
3. இவை எப்படியாயினும் **அன்பு கலந்ததால் தூய்மையானவை.**
4. **எம்போன்றவர்க்கு** உரியன.
5. ஆகையால் இனிமையான இவை. நாங்கள் **விரும்பி உண்டதற்குச் சமம்.**

என்று விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறினார்.

**4.தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.**

**தலைவனுக்குத் தோழி கூறும் செய்தி**

**முன்வினைப் பயன்**

1. **அரசனால் சிறப்பு அடைவது, யானை, தேர், குதிரையில் அரசர் முன் செல்வது** செல்வமன்று.
2. அது **அவரவர் முன்வினைப் பயன்** மட்டுமே.

**செல்வம்**

1. "புகலிடம் வந்த **எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வம்**" எனச் **சான்றோர்** கூறுகின்றனர்.

இவையே தலைவனுக்குத் தோழி கூறும் நற்றிணை செய்திகள் ஆகும்.

**5.சான்றோர் நட்புக்கு உவமையாகக் கருதப்படுவன யாவை?**

**சான்றோர் நட்புக்கு உவமையாகக் கருதப்படுவன**

1. **பொன் , பவளம், முத்து, மாணிக்கம்** ஆகியவை **வெவ்வேறு இடங்களில், ஒன்றுக்கொன்று தொலைவில் இருந்தாலும்**, மாலையாகக் கோத்து மதிப்புமிக்க **அணிகலனாக** அமைக்கும்போது, அவை **ஒன்று சேரும்.**
2. அதுபோல **சான்றோர்** என்றும் **சான்றோர் பக்கமே இருப்பர்.**
3. சான்றாண்மை இல்லாதவர் **தீயவர் பக்கமே சேர்வர்.**

**6.சீறாப்புராணம் குறிப்பு எழுதுக.**

***சீறாப்புராணம்***

1. **நபிகள் நாயகத்தின் சீரிய** வரலாற்றை எடுத்தியம்புகிறது
2. **சீறா – வாழ்க்கை, புராணம் – வரலாறு** எனப் பொருள்படும்.
3. **விலாதத்துக்காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜிரத்துக் காண்டம்** என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.
4. **5027 விருத்தப்பாக்களால்** ஆனது.
5. **இதை உமறுப்புலவர்** இயற்றினார்.

இவையே சீறாப்புராணம் பற்றிய குறிப்புகள் ஆகும்.

**7..புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?**

**புலியின் கொடுஞ்செயல்கள்**

1. கூர்நகங்களையுடைய **சிங்கக்கூட்டங்களன்றி, மற்ற விலங்குகளின் இறைச்சியை** உண்ணும்.
2. **யானைகளின் கொம்புகளைப் பிடித்திழுத்து, அவற்றின் மார்பைக்கீறி, குருதியைக்** குடிக்கும்.
3. பெரிய மலைகள் அதிரும்படி, **இடியைவிட அதிகமாக முழங்கும்**
4. புலியின் முழக்கத்தால் **காட்டெருமைகள், பன்றிகள், கரடிகள், கலைமான்கள் கால்கள்** நிலத்தில் பதியாமல் தடுமாற்றமடைந்து **விழுந்து நடுக்கமுறும்.**

இவையே புலியின் கொடுஞ்செயல்கள் ஆகும்.

**8.நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.**

**புலியின் நிலை**

நபிகளைக் கண்ட புலியானது,

1. **வாலை வளைத்தது.**
2. அரிய உடல் **நடுக்கமுற்று மெல்ல மெல்ல நடந்தது.**
3. குளிர்ச்சி தங்கிய தளிர்போலும் **திருவடிக் காட்சி கிடைத்ததென்று**, தன் **தலையைத் தாழ்த்திப் பணிந்து வணங்கியது.**

இதுவே புலியின் செயல் ஆகும்.

**9.சாதனைப் பூக்கள் என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?**

**இளைந்திரையன் சுட்டுபவை**

1. வாழ்க்கையாகிய வழித்தடங்கள் **குப்பைக்கூளங்களால் அடைபடும் முன், நேர்வழியில் செல்க.**
2. **கால்கள்** இரண்டும் **கடப்பதற்கே.**
3. **கைகள்** இரண்டும் **புதர்களை அறுப்பதற்கே.**
4. **கண்கள்** வழிகாட்ட, **காதுகள்** துணைவர, **விண்ணைக் கீறி வழி அமைக்க,** வீர **மனத்துடன்** செல்க.
5. இன்று **இளைப்பாறுவோம் என்றில்லாமல்,** சோம்பலை **ஒழித்துச் செயலை முடித்தால், வெற்றி என்னும் தேன் காதில் பாயும்.**
6. **இளைபாறாத செடி, வெற்றி** என்னும் பூக்களைப் பெற்றிடும்.

இவையே சாதனைப் பூக்கள் பற்றி இளந்திரையன் சுட்டும் கருத்துகள் ஆகும்.

## உரைநடைப் பகுதி (4 மதிப்பெண்)

**(வினா எண் 40-44)**

(இயல் – 2,3,4,6,8)

**1.அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?**

**அம்பேத்கர் கல்வித் தகுதிகள்**

**பள்ளிப்படிப்பு**

1. **1908இல் எல்பின்ஸ்டன்** பள்ளியில் தம்முடைய **உயர்நிலைப் பள்ளிப் படிப்பை** முடித்தார்.

**கல்லூரிப் படிப்பு**

2. **1912** இல் பரோடா மன்னர் பொருளுதவியுடன் **பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம்** பெற்றார்.
3. **1915இல் அமெரிக்கா கொலம்பியா** பல்கலைக்கழகத்தில் **முதுகலைப்பட்டம்** பெற்றார்.
4. **1916இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம்** பெற்றார்.
5. **அறிவியல் முதுகலைப் பட்டமும், பாரிஸ்டர் பட்டமும்** இலண்டனில் பெற்றார்.

இவையே அம்பேத்கர் பெற்ற கல்வித்தகுதிகள் ஆகும்.

**2.கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?**

**கல்வி வளர்ச்சியில் அம்பேத்கர்**

**கல்விக்கழகம்**

1. **1946**ஆம் ஆண்டு, **மக்கள் கல்விக்கழகத்தைத்** தோற்றுவித்தார்.

**சித்தார்த்தா பல்கலைக் கழகம்**

2. **மும்பையில்** அவரின் அரிய முயற்சியால் உருவான **சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில்** இன்றயை **அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும்** கற்பிக்கப்படுகின்றன.

இவையே கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்தகர் ஆற்றிய பணிகள் ஆகும்.

**3.கடல் வாணிகம் குறித்து எழுதுக.**

**கடல்வாணிகம்**

**அயல்நாட்டுத் தொடர்பு**

1. கடல் வாணிகத்தில் **தமிழர்** சிறந்திருந்தனர்.
2. **பொன், மணி, முத்து, துகில்**கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்தனர்.
3. **பூம்புகார்** முதலான பெருநகரங்கள், வணிகர் வாழும் இடங்களாக இருந்தன.
4. **கிறித்துக்கு** முன்பே **கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து** ஆகிய நாடுகளுக்கு **அரிசி, மயில்தோகை, சந்தனம்** ஆகியவை தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்தன.

**சாலமன்**

5. **கி.மு. பத்தாம்** நூற்றாண்டில் **சாலமன்** அரசனுக்கு **யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருள்களும்** தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.

**<u>சாவக நாடு</u>**

6. தமிழர்களுக்குச் **சாவகத்துடன் கடல் வாணிகத் தொடர்பு** இருந்தது.

இவையே கடல்வாணிகம் பற்றிய கருத்துகள் ஆகும்.

**4.. உழவுத் தொழில் குறித்து எழுதுக.**

**உழவுத் தொழில்**

**<u>உழுபவரே வாழ்வார்</u>**

1. பழந்தமிழகத்தில் **உழுபவரே உயர்ந்தோராக** மதிக்கப்பட்டனர்.
2. **உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்** என்பது **திருக்குறள்.**
3. தமிழர், உழுது பயிர் செய்து **உலகைக் காக்கும் இத்தொழிலைப்** பெரிதும் போற்றினர்.
4. **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே** என்னும் அன்றைய புகழ்மொழி இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது.

**<u>மருதநிலம்</u>**

5. உழவுக்குச் சிறப்புப் பெற்ற **மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக** வகைப்படுத்தப்பட்டு இருந்தது.
6. **மருதநிலத்தின் பெருமை** கருதியே **வேந்தனை முதன்மைப்படுத்தினர்** தமிழர்.

5. **காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.**

**காந்தியடிகளைக் கவர்ந்த நாடகமும் விளக்கமும்**

**<u>நாடகம்</u>**

1. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் **அரிச்சந்திரன் நாடகம்** ஆகும்.

**<u>விளக்கம்</u>**

2. உண்மையையே பேசும் **அரசர் அரிச்சந்திரனைப் பொய்பேசவைக்க**, பல இன்னல்களை உருவாக்குகிறார் **விசுவாமித்திரர்**. இதனால் **அரிச்சந்திரன் நாட்டையும் மனைவியையும் ஒரே மகனையும் இழக்கிறார். சுடுகாட்டில் பணி**புரிகிறார். முனிவர் பல்வேறு இன்னல்களை இழைத்தும், **"பொய்சொல்லேன்"** என்று மறுமொழி கூறினார்.

**<u>வாய்மை உறுதி</u>**

3. அவரது வாய்மையை நாடகம் வாயிலாக **உணர்ந்த காந்தி**, தாம் ஒரு **சத்தியவானாக இருக்கவேண்டும் என்று உறுதி**கொண்டார்.

இவையே அரிச்சந்திர நாடகமும் விளக்கமும் ஆகும்.

**6. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**

**மனிதநேயம்**

**<u>தேசாபிமானமும் மனிதாபிமானமும்</u>**

1. தேசாபிமானமும் மனிதாபிமானமும் **ஒன்றுதான்.**
2. நான் ஒரு **தேசபக்தன்.**
3. அதற்கு அடிப்படைக் காரணம் நான் **மனிதனாக** இருப்பதும், அதற்குமேல் **மனிதாபிமானியாக** இருப்பதும்தான்.

**<u>மனிதத்தன்மை</u>**

4. மனிதர்கள் **மொழியாலும் நாடாலும்** உணர்த்தப்படுவதைக் காட்டிலும் **மனிதத் தன்மையால் பிறருக்கு உணர்த்தப் பெறுவதே** சிறப்பானதாகும்.

**<u>குறிக்கோள்</u>**

5. உலகோர் **அனைவரும் குறிக்கோளுடைய மனிதராக இருந்தால்**, உலகமே ஒரு **நல்ல சமுதாயமாக** உருவாகும்.

இவையே மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியன ஆகும்.

**7. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**

**இன்னாசெய்யாமை**

1. மனிதனின் **நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும்** இருந்தால்மட்டும் **போதாது.**
2. அதனை அடையும் **வழிமுறைகளும் தூய்மையானதாகப் பிறருக்குத் துன்பம் தராததாகவும்** இருக்கவேண்டும்.

என்று காந்தி இன்னா செய்யாமை பற்றிக் கூறுகிறார்

# மனப்பாடம்

## திருக்குறள்

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

அருவினை என்ப உளவோ கருவியாற்
காலம் அறிந்து செயின்

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

அறனிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்.

முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை.

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரளவிடல்

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
துண்டாகச் செய்வான் வினை

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.

திருவள்ளுவர்

# தமிழ் இரண்டாம் தாள் – வினாத்தாள் வடிவமைப்பு

| | |
|---|---|
| **பிரிவு – I (ஒரு மதிப்பெண் வினாக்கள் வினா எண் 1-20 மொத்தம் 20 மதிப்பெண்கள்)** | |
| **பகுதி - 1 (வினா எண் 1–5)** உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | 5X1= 5 |
| **பகுதி - 2 (வினா எண் 6–10)** கோடிட்ட இடத்தை நிரப்புக | 5X1= 5 |
| **பகுதி - 3 (வினா எண் 11–20)** சுருக்கமாக விடையளித்தல் (மொழிப்பயிற்சி) | 10X1=10 |
| **பிரிவு – II (இரண்டு மதிப்பெண் வினாக்கள் வினா எண் 21-27 மொத்தம் 10 மதிப்பெண்கள்)** | |
| **பகுதி - 1 (வினா எண் 21–27)** இலக்கண வினா-விடை (ஏழில் ஐந்தனுக்கு) | 5X2=10 |
| **பிரிவு – III (ஐந்து மதிப்பெண் வினாக்கள் வினா எண் 28-39 மொத்தம் 50 மதிப்பெண்கள்)** | |
| **பகுதி - 1 (வினா எண் 28–30)** பா, அணி, அலகிடுதல் (மூன்றில் இரண்டு) | 2X5=10 |
| **பகுதி - 2 (வினா எண் 31–33)** துணைப்பாடக் கட்டுரை (மூன்றில் இரண்டு) | 2X5=10 |
| **பகுதி - 3 (வினா எண் 34)** ஆங்கிலச் சொல், அரபு எண் மொழியாக்கம் | 3+2 = 5 |
| **(வினா எண் 35)** ஆங்கில உரைப்பகுதி, பழமொழி மொழியாக்கம் செய்தல் | 3+2= 5 |
| (காது கேளாதவருக்கு வினா எண் 35க்கு பாதிலாக மாற்று வினா கொடுக்கப்படுகிறது) | |
| **பகுதி - 4 (வினா எண் 36)** கதை நிறைவு செய்தல் (அ) கவிதை எழுதுதல் | 5 |
| **பகுதி - 5 (வினா எண் 37)** பாநயம் பாராட்டுதல் | 1X5= 5 |
| **பகுதி - 6 (வினா எண் 38)** படிவம் நிரப்புதல் | 5 |
| **பகுதி - 7 (வினா எண் 39)** வாழ்வியல் சூழலைப் படித்து விடையளித்தல் | 3+2=5 |
| **பிரிவு – IV (கடிதம் கட்டுரை வினாக்கள் வினா எண் 40-41 மொத்தம் 20 மதிப்பெண்கள்)** | |
| **பகுதி - 1 (வினா எண் 40)** கடிதம் எழுதுதல் (இரண்டில் ஒன்று) | 1X10=10 |
| **பகுதி - 2 (வினா எண் 41)** கட்டுரை எழுதுதல் (இரண்டில் ஒன்று) | 1X10=10 |
| **மொத்த மதிப்பெண்கள் 100** | |

# தமிழ் இரண்டாம் தாள்

## ஒரு மதிப்பெண் வினா-விடைகள்

**(வினா எண் 1-10)**

**(10 மதிப்பெண்)**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. இளவழகன் வந்தான். இது **வெளிப்படை** தொடர்.
2. மாடு என்னும் சொல் **அஃறிணைப் பொதுப்பெயர்** ஆகும்.
3. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது **பசுவைக்** குறிக்கும்
4. வடக்கு என்னும் திசைப்பெயரொடு பிற திசைகள் வந்து சேரும்போது **நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்**
5. மேற்கு நாடு என்பது **மேனாடு** எனச் சேரும்.
6. கருமை குழி என்பது **ஈறுபோதல், இனமிகல்** எனும் விதிகளின் படி புணரும்.
7. பொருளிலக்கணம் **இரண்டு** வகைப்படும்.
8. அகத்திணைகள். **ஏழு** .வகைப்படும்.
9. மார்கழி, தை ஆகிய இரண்டும் **முன்பனிக்** காலத்திற்குரியன.
10. மருதநிலத்திற்குரிய தெய்வம் **இந்திரன்**
11. பாலை நிலத்திற்குரிய பறவைகள் **புறா, பருந்து**
12. புறத்திணைகள் **பன்னிரண்டு** வகைப்படும்.
13. மண்ணாசைக் கருதிப் போருக்குச் செல்வது **வஞ்சித்திணை**
14. பாடாண்திணை என்பது **ஆண்மகனின் ஒழுகலாறுகள்** கூறுவது
15. ஒரு தலைக்காமம் என்பது **கைக்கிளை**
16. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது **காஞ்சி** .ஆகும்.

17. உலகு என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு **பிறப்பு**
18. நல்லவை – இச்சொல் அலகிட்டால் **நேர்நிரை** எனப் பிரியும்.
19. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி **முச்சீராய்** வரும்
20. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் **ஏகாரத்தில்** முடிவது சிறப்பு

**கூடுதல் வினாக்கள் (பொதுத்தேர்வு வினாக்கள்)**

21. கீழ்வருவனவற்றுள் தொடர்மொழி **அந்தமான்**
22. கீழ்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடரை எடுத்து எழுதுக **படித்த** கயல்விழி
23. கீழ்வருவனவற்றுள் இனங்குறித்தல் சொல்லை எடுத்து எழுதுக **கதிர்வேல் வெற்றிலை தின்றான்**
24. எதிர்கால இடை நிலை அமைந்த வினைமுற்று **படிப்பான்**
25. தனிமொழியைத் தேர்ந்தெடு **கண்**
26. ஒருபொருட் பன்மொழியைத் தேர்ந்தெடு **நடுமையம்**
27. வடக்கு கிழக்கு எவ்வகைப் புணர்ச்சி என்று கூறுக **திசைப்பெயர்ப்புணர்ச்சி**
28. தலைவன் – இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் **ஐகாரக் குறுக்கம்**
29. ஒரு பொருட்பன்மொழியைத் தேர்ந்தெடு – **குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து** காணப்படுகின்றன.
30. எதிர்கால இடைநிலை அமைந்த வினைமுற்று – **வருவான்**
31. ஈற்றில் ஐகாரம் குறைந்து வரும் சொல் **திண்ணை**
32. பொதுமொழியைத் தேர்ந்தெடு – **தாமரை**
33. ஒரு பொருட்பன்மொழிக்கு எடுத்துக்காட்டு – **உயர்நதோங்கிய மரம்**
34. குறிஞ்சி நிலத்துப் பறவைகள் **கிளி, மயில்**
35. வரும் வண்டி – இச்சொற்களில் வரும் குறுக்கம் **மகரக் குறுக்கம்**
36. கலா கலகலவெனச் சிரித்தாள் இதில் கல கல என்பது **இரட்டைக்கிளவி**
37. சிறப்பு என்னும் சொல் வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு **பிறப்பு** ஆகும்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது, **பொம்மை பூங்குழலியால் செய்யப்பட்டது** என வரும்.
2. அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் **தனிநிலைத்.** தொடர் ஆகும்.
3. அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் **திருக்குறளைக் கற்பித்தான்** என வரும்.
4. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது **தனிமொழி**
5. தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்**
6. வினைமுற்று .**தெரிநிலை, குறிப்பு** என இருவகைப்படும்.
7. ஓர் எச்ச வினை **பெயரைக்** கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.
8. ஒரு பொருள் குறித்துவரும் சொற்களையே **ஒரு பொருட்பன்மொழி** .என்பர்
9. ஒரு பொருட் பன்மொழிக்குச் சான்று **நடுமையம்.**
10. இது செய்வாயா என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக் கூறுவது **உறுவது கூறல்** விடை.
11. ஆடத் தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது **இனமொழி** விடை.
12. நன்னூல் கிடைக்குமா எனக் கடைக்காரரிடம் கேட்பது **கொளல்** வினா.
13. அகம், புறம் ஆகிய இரண்டும் **பொருள்** இலக்கணம் ஆகும்.
14. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் **அன்பின் ஐந்திணை** எனப்படும்
15. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி **கடலும் கடல் சார்ந்த** பகுதியாகும்.
16. யாமம் என்பது இரவு 10 மணிமுதல் **இரவு 2 மணி வரை** ஆகும்.
17. மருதம், நெய்தல் ஆகிய இரண்டனுக்கும் **ஆறு** பெரும்பொழுதுகளும் வரும்.
18. திருமால் **முல்லை** நிலத்திற்குரிய தெய்வம்.
19. மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் **மருதம்** திணைக்குரிய பறைகள்.
20. நெய்தல் திணைக்குரிய தொழில் .**மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல்** .ஆகும்.
21. நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று **ஒரு** விகற்பத்தானும் **இரு** விகற்பத்தானும வரும்.
22. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தானும் வருவது **நேரிசைச் சிந்தியல் வெண்பா** .ஆகும்.

23. வெண்பாவின் ஓசை **செப்பலோசை** ஆகும்.
24. ஆசிரியப்பாவின் வேறு பெயர் **அகவற்பா** ஆகும்.
25. ஆசிரியப்பாவின் ஓசை **அகவலோசை** ஆகும்

**கூடுதல் வினாக்கள் (பொதுத்தேர்வு வினாக்கள்)**

26. மரவேர் என்பது **கெடுதல் விகாரம்** ஆகும்.
27. வேய்புரைதோள் – உவம உருபு **புரை**
28. நண்பகல் என்பது **பாலை** திணைக்குரிய பொழுது ஆகும்.
29. மொழியமிழ்து – இவ்வுருவகத்திற்கான உவமை **அமிழ்துமொழி**
30. வெளவால் – இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் **ஔகாரக் குறுக்கம்**
31. கிளிபோலப் பேசினாள் – இச்சொல்லில் அமைந்த உவம உருபு **போல**
32. மாலை என்பது **முல்லைத்** திணைக்குரிய சிறுபொழுது ஆகும்.
33. மரவடி – இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி **மகர ஈற்றுப் புணர்ச்சி** ஆகும்.
34. இது செய்வாயா? என்ற வினாவிற்கு, நீயே செய் என்பது **ஏவல்விடை**
35. தேன்போன்ற மொழி – இதில் உள்ள உவம உருபு **போன்ற**
36. முஃடீது – இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் **ஆய்தக்குறுக்கம்**
37. படித்து வந்தான் – இதில் படித்து என்பது **வினையெச்சம்** ஆகும்.
38. முழவு உறழ் தடக்கை – இதில் உள்ள உவம உருபு **உறழ்**
39. இந்திரன் **முல்லை** நிலத்திற்குரிய தெய்வம்.
40. செம்மொழி **பண்புப்பெயர்ப் புணர்ச்சி** ஆகும்.
41. நிரை கவர்தல் **வெட்சி** என்னும் புறத்திணைக்குரியது.
42. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது **பிறிதுமொழிதல் அணி** ஆகும்.
43. விடை **எட்டு** வகைப்படும்.
44. மலரன்ன சேவடி – இதில் அமைந்துள்ள உவம உருபு **அன்ன**
45. அணி என்னும் சொல்லுக்கு **அழகு** என்பது பொருள்
46. செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆறும் வெளிப்படையாக உணர்த்துவது **தெரிநிலை பெயரெச்சம், தெரிநிலை வினைமுற்று.**
47. தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காகக் கேட்கும் வினா **அறியா வினா**
48. புகழ்வதுபோல பழிப்பதும், பழிப்பது போல புகழ்வதும் **வஞ்சப்புகழ்ச்சி அணி** ஆகும்.

(குறிப்பு – கோடிட்ட இடத்தில் உள்ளவை விடைதேர்க-விலும், விடை தேர்க-வில் உள்ள வினாக்கள் கோடிட்ட இடத்திலும் மாற்றியும் கேட்கப்படுகின்றன).

## சுருக்கமாக விடையளிக்க

**(வினா எண் 11-20)**

**(மதிப்பெண் 10)**

**தொடரை மாற்றி அமைக்க**

1. திருக்குறளை அனைவரும் அறிவர் - வினாத்தொடாக மாற்றுக.
   **எதை அனைவரும் அறிவர்?**
   **திருக்குறளை அனைவரும் அறிவரா?**
2. இமயமலை மிகவும் உயரமானது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.
   **என்னே! இமயமலையின் உயரம்!**
3. கிளி கல்லால் அடிபட்டது – உணர்ச்சித் தொடராக மாற்றுக.
   **ஐயோ! கிளி கல்லால் அடிபட்டதே!**
4. வாரியார், “குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்கவேண்டும்’’ என்றார் – அயற்கூற்றாக்குக.
   **நாள்தோறும் திருவாசகம் படிக்குமாறு வாரியார் குழந்தையிடம் கூறினார்.**
5. நேற்று புயல் வீசியது. மரங்கள் சாய்ந்தன – கலவைத்தொடராக மாற்றுக.
   **நேற்று புயல் வீசியதால் மரங்கள் சாய்ந்தன**

**சந்திப்பிழையற்ற தொடராக மாற்றுக.**

6. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
   **கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.**

**ஒருமை பன்மை பிழை நீக்குக.**

7. அவன் கவிஞன் அல்ல.
   அவன் கவிஞன் **அன்று**

**பிறமொழி சொல்லற்ற தொடராக்குக.**

8. அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது.
   அவர்களிடையே இடையே **உரையாடல்** நடந்தது.

**வழூஉச் சொல்லற்ற தொடர் ஆக்குக.**

9. வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.
   **வலப்பக்கச் சுவரில்** எழுதாதே.
10. எண்ணெ வில அதிகமாகிவிட்டது.
    **எண்ணெய் விலை** அதிகமாகிவிட்டது.
11. இன்னக்கி ஒரு கிலோ அவரக்கா வாங்கி வந்தேன்.
    **இன்றைக்கு** ஒரு கிலோ **அவரைக்காய்** வாங்கி வந்தேன்.
12. கதவ தாப்பாள் போட மறந்துட்டேன்
    **கதவைத் தாழ்ப்பாள்** போட மறந்துவிட்டேன்.

**தொகைச் சொற்களை விரித்தெழுதுக.**

13. இருவினை,முத்தமிழ், மூவேந்தர், நானிலம், ஐந்திணை, முக்கனி, இருதிணை, நாற்றிசை

| | | |
|---|---|---|
| இருவினை | - | **தன்வினை, பிறவினை** |
| முத்தமிழ் | - | **இயல், இசை, நாடகம்** |
| மூவேந்தர் | - | **சேர, சோழ, பாண்டியர்** |
| நானிலம் | - | **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்** |
| ஐந்திணை | - | **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை** |
| முக்கனி | - | **மா, பலா, வாழை** |
| இருதிணை | - | **உயர்திணை, அஃறிணை** |
| நாற்றிசை | - | **கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு** |

**உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.**

14. நான் (கு) மழையில் நனைவது பிடிக்கும்.
    **எனக்கு** மழையில் நனைவது பிடிக்கும்.
15. அண்ணன், தம்பி வீடு (கு) சென்றார்
    அண்ணன் தம்பி **வீட்டுக்குச்** சென்றார்.
16. மாணவர்கள் (ஐ) வட்டமாக உட்காரச் செய்க.
    **மாணவர்களை** வட்டமாக உட்காரச் செய்க.
17. நான் (கு) திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
    **எனக்குத்** திருக்குறளில் ஆர்வம் மிகுதி
18. வேல்விழி திருக்குறள் (ஐ) படித்தாள்.
    வேல்விழி **திருக்குறளைப்** படித்தாள்.

**இளமைப் பெயர்களைப் பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 19. | ஆடு | - | கன்று |
| 20. | மான் | - | பிள்ளை |
| 21. | கீரி | - | குட்டி |
| 22. | சிங்கம் | - | குஞ்சு |
| 23. | கோழி | - | குருளை |

**(விடைகள் – ஆட்டுக்குட்டி, மான்கன்று, கீரிப்பிள்ளை, சிங்கக்குருளை, கோழிக்குஞ்சு)**

**நிறுத்தற்குறி இடுக.**

24. “சட்டத்தை மதிப்போம்; குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம்; சட்டம் நம்மை காக்கும்.”
25. ‘அம்பேத்கர் ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது’ என்றார்.
26. தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன.
27. ஓட்டுநர், நடத்துநர் முதலான பணிகளுக்கும் உடற்கூறுத் தகுதியுடையவர்கள் மட்டுமே சேர இயலும்.

<u>பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.</u>

28. ஷேத்திரங்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
**ஆலயங்கள்** தோறும் சென்று **சிலைகளை** வழிபடுக.
29. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
**இவ்வழியில் பயணம்** செல்லுங்கள்.
30. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
இந்தச் **சட்டை** மிகவும் **விலைமிக்கது.**
31. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
நாளை நடக்கவிருக்கும் **போட்டியில்** இந்தியா கண்டிப்பாக **வெற்றி அடையும்**.
32. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.
நான் இந்தக் **கல்லூரியின் முன்னாள் மாணவன்**
33. வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்
வேலன் **தன்தொழிலில் மிக்க வருவாய்** ஈட்டினான்
34. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது
அந்த **அறிவியல் அறிஞரின்** கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
35. அனைவரையும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
அனைவரையும் உண்ணா**நோன்புப்** போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
36. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த நிபுணர்
அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த **வல்லுனர்**.
37. அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.
**அழகுபடுத்திக்** கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.
38. இறைவனை நோக்கி யாத்திரை செல்லல் பக்தருக்கான மார்க்கம்.
இறைவனை நோக்கி **பயணம்** செல்லல் **தொண்டருக்கான வழி.**
39. எல்லா ஸ்டூடன்சும் பஸ்ஸில் ஏறி ஸ்கூலுக்குப் போனார்கள்.
எல்லா **மாணவர்களும் பேருந்தில் ஏறிப் பள்ளிக்குப்** போனார்கள்.

<u>உவமைகளைச் சொற்றொடரில் அமைக்க</u>

40. ஆசிரியர் நடத்திய பாடம் **பசுமரத்தாணிபோல** மனதில் பதிந்தது.
41. **குன்றின் மேலிட்ட விளக்குப்போல**, என் தந்தையின் புகழ் விளங்கியது.
42. உறவினர் இறந்ததைக் கேட்டு **அனலிடைப்பட்ட புழுவைப்போலத்** துடித்தேன்.
43. **கடலில் கரைந்த பெருங்காயம் போல**, என் அறிவுரை என் நண்பனிடம் வீணானது.
44. என் எழுதுகோலை **இலவு காத்த கிளி போல** காத்து வருகிறேன்.
45. என் தோல்வியால் **அடியற்ற மரம்போல** வீழ்ந்தேன்.
46. என் அப்பா **மடைதிறந்த வெள்ளம்போல** பேசுவார்
47. என் எழுத்து **கல்மேல் எழுத்துபோல** அழகாக இருக்கும்.
48. மழை **அத்திப் பூத்தாற்போல** பெய்யும்
49. **மழைகாணாப் பயிர்போல** என் நண்பன் வருகைக்காகக் காத்திருந்தேன்.
50. நட்பு என்பது **மலரும் மணமும்போல** இருக்கவேண்டும்.
51. **வேலியே பயிரை மேய்ந்ததுபோல,** நண்பர்களை ஏமாற்றக்கூடாது.
52. வாலியும் சுக்ரீவனும் **கீரியும் பாம்பும்போல** இருந்தனர்.
53. என் தந்தையின் அறிவுரை **உள்ளங்கை நெல்லிக்கனிபோல** இனித்தது.
54. **கிணற்றுத்தவளைபோல**, ஒன்றும் தெரியாமல் வாழாதே.
55. **நிலவும் வானமும் போல** நட்பாக இரு.

<u>உவம உருபுகளைக் கண்டு எழுதுக</u>

| | | | |
|---|---|---|---|
| **56.** | கிளிபோலப் பேசினாள் | - | **போல** |
| **57.** | வேய்புரை தோள் | - | **புரை** |
| **58.** | தாயொப்பப் பேசும் மகள். | - | **ஒப்ப** |
| **59.** | முழவு **உறழ்** தடக்கை | - | **உறழ்** |
| **60.** | மலரன்ன சேவடி | - | **அன்ன** |

**உவமையை உருவகமாக மாற்றுக.**

**61.** மதிமுகம் - **முகமதி**
**62.** பவளவாய் - **வாய்ப்பவளம்**
**63.** மலரடி - **அடிமலர்**
**64.** முத்துப்பல் - **பல்முத்து**
**65.** மலர்ப்பாதம் - **பாதமலர்**

**மரபுத் தொடர் பொருளறிக**

**66.** ஆயிரங்காலத்துப் பயிர் - **நீண்ட காலத்திற்குரியது**
**67.** முதலைக் கண்ணீர் - **பொய்யழுகை**
**68.** அவசரக் குடுக்கை - **எண்ணித் துணியாதார்**
**69.** ஆகாயத்தாமரை - **இல்லாத ஒன்று**
**70.** குட்டிச் சுவர் - **பயனின்றி இருத்தல்**
**71.** சீட்டுக் கிழிந்துவிட்டது - **வேலை போய்விட்டது**
**72.** கயிறு திரித்தல் - **பொய் கூறுதல்**
**73.** கொட்டி அளத்தல் - **மிகுதியாகப் பேசுதல்**
**74.** பஞ்சாயப் பறத்தல் - **அலைந்து திரிதல்**

75. இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.
இளங்கோவின் குடும்பத்தினர் **பரம்பரைப்பரம்பரையாக** வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.

76. எம்.ஜி.ராமச்சந்திரன் திரைவானில் கொடிகட்டிப் பறந்தார்.
எம்.ஜி.ராமச்சந்திரன் திரைவானில் **தனிப்புகழோடு** விளங்கினார்.

**ஒருமை பன்மை நீக்குக**

77. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக்கருவி என்ற கருவி பயன்படுகின்றன.
திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக்கருவி என்ற கருவி பயன்படுகின்**றது**.

78. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றது.
நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் **இருக்கின்றன**

79. இன்று பேருந்துகள் ஓடாது.
இன்று பேருந்துகள் **ஓடா**.

80. ஓர் அணில் மரத்தில் ஏறின.
ஓர் அணில் மரத்தில் **ஏறியது**.

81. நான் வாங்கிய நூல் இது அல்ல.
நான் வாங்கிய நூல் இது **அன்று.**

82. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
பெண்கள் பெற வேண்டிய**வை** பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை

83. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.
தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தது**

84. ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்**தாள்.**

85. மனிதனின் நோக்கம் உயர்ந்த்தாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.
மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் **போதாது.**

**தொடருக்கு ஏற்ற வினா அமைக்க.**

86. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
**திரைப்படம் எடுப்பதனைவிட எதை எடுப்பது கடினமான பணியாகும்?**

87. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி.ராமச்சந்திரன் கருதினார்.
**நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இருகண்களாகக் கருதியவர் யார்?**

**சொற்களுக்கு இருபொருள் எழுதுக**

**88.** ஆறு - **எண், நதி**
**89.** திங்கள் - **கிழமை, மாதம்**
90. மாலை - **மாலைவேளை, பூமாலை**
91. நகை - **சிரிப்பு, அணிகலன்**
**92.** மெய் - **உடல், உண்மை**

**மிகும், மிகா இடம் ஒன்றனுக்குச் சான்று தருக**

93. வல்லினம் மிகும் இடம் ஒன்றனக்குச் சான்று தருக.
அ, இ, உ முன் மிகும் சான்று - அச்சட்டை
94. வல்லினம் மிகா இடம் ஒன்றனுக்குச் சான்று தருக
வினைத்தொகையில் மிகாது சான்று – ஊறுகாய்

**உரிய வினைமரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

95. எங்கள் பள்ளிக்குச் சுற்றுச்சுவர். **எழுப்பப்பட்டது**. (கட்டப்பட்டது, **எழுப்பப்பட்டது**)
96. பாரதியார் செய்யுளை **இயற்றினார்** (பாடினார், **இயற்றினார்**)
97. வேடன் **எய்த** அம்பு யானையை வீழ்த்தியது. (**எய்த**, செலுத்திய)
98. மாறன் ஓவியத்தை **புனைந்தான்** வரைந்தான், **புனைந்தான்)**
99. அந்தச் சிற்பம் ஒரே கல்லில் **வடிக்கப்பட்டது** .(**வடிக்கப்பட்டது**, செதுக்கப்பட்டது)

**பொருத்துக**

| | | |
|---|---|---|
| 100. மயில் | - | கரையும் |
| 101. கூகை | - | கத்தும் |
| 102. யானை | - | குழறும் |
| 103. காகம் | - | அகவும் |
| 104. ஆடு | - | பிளிறும் |

(விடைகள் – **மயில் அகவும், கூகை குழறும், யானை பிளிறும், காகம் கரையும், ஆடு கத்தும்**)

**சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக**

105. தமிழில் வரலாற்றுக் கருத்துக்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் காணமுடியும்.
106. அறிவு ஒளிபெற அங்கு சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினர்.
107. ஏழைகளுக்குப் பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்றுத் தந்தார்.
108. மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகின்றது.

**வினையெச்சமாக மாற்றுக**

109. படி, (விடை – **படித்து)**

**பெயரெச்சமாக மாற்றுக**

110. பிரி (விடை – **பிரித்த, பிரிக்க, பிரிய**)

# அணி

**(வினா எண்.29)**

**(5 மதிப்பெண்)**

(இவ்வினாப் பகுதியில் எடுத்துக்காட்டு கொடுத்தும், அணியின் பெயரைக் குறிப்பிட்டும் இரு வினாக்கள் தரப்படும். இங்கே எடுத்துக்காட்டுடன் வினா தரப்பட்டுள்ளது. இவற்றையே நீங்கள் அணியாகவும் மாற்றிக் கொள்ளலாம்)

**அணியைச் சுட்டி விளக்குக.**

1. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

**அணி சுட்டல்**

இச்செய்யுளில் **வஞ்சப் புகழ்ச்சி அணி** பயின்றுள்ளது.

**அணி விதி**

**புகழ்வதுபோலப் பழிப்பதும், பழிப்பதுபோலப் புகழ்வதும்** வஞ்சப்புகழ்ச்சி அணி எனப்படும்.

**விளக்கம்**

தீயவர்களைத் **தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து** கூறுவதுபோலக் கூறி, தீயவர்கள் **தீய செயல்களால் அழிவார்கள் எனப் பழித்துக்** கூறியதால், இது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆனது.

**அணியைச் சுட்டி விளக்குக.**

2. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

**அணி சுட்டல்**

இச்செய்யுளில் **சொற்பொருள் பின்வருநிலை அணி** பயின்றுள்ளது.

**அணி விதி**

செய்யுளில் **முன்னர் வந்த சொல்**, மீண்டும் **மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது** சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

**விளக்கம்**

சொல் என்னும் சொல்லானது திரும்பத் திரும்ப வந்து, சொல்லுதல் என்ற ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள்பின்வருநிலை அணி ஆனது.

**அணியைச் சுட்டி விளக்குக.**

3. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

**அணி சுட்டல்**

இச்செய்யுளில் **பிறிது மொழிதல்அணி** பயின்றுள்ளது.

**அணி விதி**

**உவமையைக் கூறிப்பொருளை உணரவைப்பது** பிறிது மொழிதல் அணி ஆகும.

**விளக்கம்**

நீரில் வெல்லும் முதலை, நிலத்திற் தோற்கும் என்ற உவமையின் வழியாக. ஒரு அரசனுக்கு அவனுடைய நிலமே வெற்றி தரும் என்ற கருத்தை மறைமுகமாகக் கூறுவதால் இது பிறிது மொழிதல் அணி ஆனது.

**அணியைச் சுட்டி விளக்குக.**

1. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

**அணி சுட்டல்**

இச்செய்யுளில் **சொற்பொருள்பின்வருநிலை அணி** பயின்றுள்ளது.

**அணி விதி**

செய்யுளில் **முன்னர் வந்த சொல்**, மீண்டும் **மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது** சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

**விளக்கம்**

தீய என்னும் சொல்லானது திரும்ப திரும்ப வந்து, தீமை என்ற ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள்பின்வருநிலை அணி ஆனது.

**அணியைச் சுட்டி விளக்குக.**

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

**அணி சுட்டல்**

இச்செய்யுளில் **பிறிது மொழிதல்அணி** பயின்றுள்ளது.

**அணி விதி**

உவமையைக் கூறிப்பொருளை உணர வைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும.

**விளக்கம்**

ஆந்தையைப் பகலில் காக்கை வெல்லும் என்ற கருத்தின் வழியாக, பகை வெல்ல விரும்பும் மன்னர், பகைவர் அழியும் காலத்திற்காகக் காத்திருக்கவேண்டும் என்பதால், இது பிறிது மொழிதல் அணி ஆனது.

# துணைப்பாடக் கட்டுரைகள்

**(அரைப்பக்கம்)**

**(வினா எண் 31-33)**

**(5 மதிப்பெண்)**

## மெல்ல மெல்ல மற - கதைச்சுருக்கம்

**முன்னுரை**

சிறுகதை மற்றும் நாவலாசிரியரான லட்சுமியின் படைப்புகள் மனித வாழ்வின் சிறப்பை, **நல்ல பழக்கவழக்கங்களை** உணர்த்துவன. அவரின் மெல்ல மெல்ல மற கதையின் சுருக்கத்தைக் காண்போம்.

**கதைச்சுருக்கம்**

மருத்துவமுகாம் சென்ற கோகிலா, டாக்டர் கொடுத்த **“புகை உங்களுக்குப் பகை”** என்ற நூலைக் கமலநாதனிடம் கொடுத்தாள்.

புகை பிடிக்கிறவங்களுக்கு நூத்துக்கு இருபத்தஞ்சு பேருக்காவது சுவாசப் பையிலே புத்துநோய் வரும் என்று கோகிலா சொன்னாள். கமலநாதனோ, “வந்தால் போகட்டும் போ” என்று மறுத்தான்.

பல நாள் கழித்து, அவனுடைய நண்பன் **ராமலிங்கம் புகைப்பிடிக்கும் பழக்கத்தால் வந்த புற்றுநோயால் இறந்ததைப் பார்த்த கமலநாதன் பயந்தேவிட்டான்**. பூவும் பொட்டுமில்லாத ராமலிங்கத்தின் **மனைவியையும், அப்பாவுக்காக ஏங்கும் பிள்ளைகளையும்** பார்த்துப் பயந்த கமலநாதன், அவர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வீடு திரும்பினான்.

வழியில் மல்லிகைப்பூ வாங்கி வந்த கமலநாதன், தன் மனைவியிடம்,**“நீ பொட்டும்பூவுமா சந்தோஷமாக இருக்கணும். நான் சாக விரும்பல. சிகரெட்டை மறக்க தேகப் பயிற்சி செய்யறேன். பிள்ளைகளுக்குச் சொல்லித் தரேன். ஆபிஸ்ல மும்முரமா பணி செய்வேன்.”** என்றான்.

“**ஆண்டவா, அதிர்ச்சி உருவத்திலேயே எங்களுக்குத் துணை புரிஞ்சியாப்பா**” என்று கோகிலா மனதிற்குள் கடவுளுக்கு நன்றி கூறினாள்.

**முடிவுரை**

புகை மூட்டத்தில் விடுபட்ட கமலநாதன், தன் மனைவி கோகிலாவுடன் நெடுங்காலம் வாழ்வான்.

## கமலநாதன் மனம் திருந்தினான்

**முன்னுரை**

கோகிலா எவ்வளவு சொல்லியும், புகைப் பழக்கத்தைக் கமலநாதன் விடவில்லை. அவனுக்கு அதிர்ச்சியான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதில் மனம் திருந்தினான். எப்படி என்பதைக் கீழே காண்போம்.

**மனம் திருந்துதல்**

நர்மதா நர்சிங் ஹோமில் உடம்பு சரியில்லாமல் இருந்த நண்பன் இராமலிங்கத்தைக் கமலநாதன், கோகிலாவுடன் பார்க்கப்போனான். இராமலிங்கத்திற்குப் புகைப்பிடிக்கும் பழக்கம் இருக்கிறது. கமலநாதனும் அப்படியே.

“புகைப்பிடிப்பதால் சுவாசப் பையில் புற்றுநோய் வந்துவிட்டது. கட்டியை எடுத்தாலும் **அஞ்சு அல்லது ஆறு வருஷம்தான் வாழமுடியும்** என டாக்டர் சொல்லிவிட்டார்“ என்று ராமலிங்கம் மனைவி சியாமளா சொல்லி வருத்தப்பட்டாள். அன்றிரவே இராமலிங்கம் இறந்துவிட்டார்.

அவனுடைய நண்பன் **ராமலிங்கம் புகைப்பிடிக்கும் பழக்கத்தால் வந்த புற்றுநோயால் இறந்ததைப் பார்த்த கமலநாதன் பயந்தேவிட்டான்**.

சிலநாள் கழித்து இராமலிங்கம் வீட்டுக்குக கோகிலாவுடன் சென்ற கமலநாதன், சுவரில் **இராமலிங்கம் படம்** இருந்தது. அதிலிருந்து **இராமலிங்கம் எட்டிப் பார்ப்பது போன்று இருந்தது. அவன் மனைவி சியாமளாவோ வெறும் கழுத்தும் வெறிச்சோடிய நெற்றியுமாக** இருந்தாள். பூவும் பொட்டுமில்லாத ராமலிங்கத்தின் **மனைவியையும், அப்பா எப்போ வருவாரோ? என ஏங்கும் பிள்ளைகளையும்** பார்த்துப் பயந்தான். கமலநாதன் அடிவயிற்றில் பகீரென்று உணர்வு. அவர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வீடு திரும்பினான்.

“இராமலிங்கத்தின் மரணம் அவன் குடும்பத்தை எப்படிப் பாதிச்சுட்டுதுன்னு என் மனசு ரொம்ப துடிச்சுப்போயிட்டது கோகிலா. **உன்னையும் பிள்ளைகளையும் நிறுத்திட்டு, நான் கஷ்டப்பட்டுச் சாக விரும்பல”** என்ற கமலநாதன் தழுதழுத்தான். மனம் திருந்தினான்.

**முடிவுரை**

புகை மூட்டத்தில் விடுபட்ட கமலநாதன், தன் மனைவி கோகிலாவுடன் நெடுங்காலம் வாழ்வான்

### அண்ணாவின் கடிதக் கருத்துகள்

**முன்னுரை**

அறிஞர் அண்ணா கடிதங்கள் வழியாகத் தமிழ் நாட்டு மக்களுக்குப் பல கருத்துக்களை எழுதினார். **காஞ்சி இதழில் தைப்பொங்கல் திருநாளன்று** எழுதிய கடிதத்தில் உள்ள கருத்துக்களைக் காண்போம்.

**காஞ்சிக் கடிதக் கருத்துகள்**

1. பீடத்தில் என்னை மக்கள் அமர்த்தினர்.
2. நம்பிக்கை ஏற்றபடி நடந்துகொள்வேன்.
3. பொங்கல் புதுநாள், நமக்கு மகிழ்ச்சியும் நாட்டுக்குப் பொலிவும் சேர்ந்துவிடுகிறது.
4. இந்நாளில் உழைப்பின் பெருமை பேசமுடிகிறது.
5. தமிழர் வாழ்ந்த நேர்த்தி நினைவுக்கு வருகிறது.
6. “உழைத்து, உரிய நேரத்தில், முயற்சியால் பெறு“ என நிலமடந்தை மனிதர்களுக்கு ஆணையிடுகிறாள்.
7. உழைப்பின் பெருமையைப் பற்றி முடியரசன் கவிதை எழுதியுள்ளார்.
8. இன்பம், புதுமை, பொலிவு, வளம், வாழ்வு ஆகியவை சிறக்கவேண்டும்.
9. தமிழும் தமிழகமும் வாழவேண்டும்.

**முடிவுரை**

இவையே அண்ணா எழுதிய காஞ்சி கடிதத்தில் அமைந்துள்ள கருத்துகள் ஆகும்.

## சட்ட வகைகள்

**(அல்லது)**

**அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்கள்**

**முன்னுரை**

சட்டம் என்பதற்குச் செம்மை என்று பொருள். செம்மை என்பதற்கு நடுவுநிலை என்றும் பொருளுண்டு. அன்றாட வாழ்வில் உள்ள சட்டங்களைப் பற்றிக் கீழே காண்போம்.

**சட்ட வகைகள்**

1. உலக நாடுகளுக்கான சட்டத்தை **அனைத்து நாட்டுச் சட்டம்** என்பர்.
2. வாழ்வின் அடிப்படைச் சட்டத்தை **அரசியல் அமைப்புச் சட்டம்** என்கிறோம்.
3. இந்தியாவில் உள்ள அனைத்துச் சமய மக்களுக்காகச் **சமயச் சார்புச் சட்டங்கள்** உள்ளன.
4. அந்தந்த மாநிலங்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, சூழ்நிலைக்கேற்ப **மாநிலச் சட்டங்கள்** உள்ளன.
5. சாலை விதிகளுக்காகப் **போக்குவரத்துச் சட்டங்கள்** உள்ளன.
6. கல்வி நிறுவனங்களில் அமையும் வன்கொடுமைக்கு எதிராக **மாணாக்கர் வன்கொடுமைத் தடைச்சட்டம்** அமைந்துள்ளது.
7. வறுமைக்காகத் தொழிலாளியாகும் குழந்தைகளுக்கு என, **குழந்தைத்தொழிலாளர் தடைச்சட்டம்** உள்ளது.
8. நுகர்வோர் உரிமைக்காக, **நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்** அமைந்துள்ளது.
9. தனிநபர், நிர்வாகம், நிறுவனத்தைப் பற்றிய தகவலை அறிய, **தகவல் அறியும் உரிமைச் சட்டம்** அமைந்துள்ளது.

**முடிவுரை**

மனிதகுல வளர்ச்சிக்கு அமையும் சட்டங்களின் வகைகள் இவையாகும்.

### நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
### தகவல் அறியும் உரிமைச் சட்டம்

**முன்னுரை**

சட்டம் என்பதற்குச் செம்மை என்று பொருள். செம்மை என்பதற்கு நடுவுநிலை என்றும் பொருளுண்டு. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிக் கீழே காண்போம்.

**நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்**

1. நுகர்வோர் உரிமைக்காக, **நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்** அமைந்துள்ளது
2. விற்பனைப் பொருளில் குறைபாடுகள் இருந்தால், மாநில, மாவட்டக் குறைதீர் மன்றங்களை அணுகித் தீர்வு காணலாம்.

**தகவல் உரிமை அறியும் சட்டம்**

3. தனிநபர், நிர்வாகம், நிறுவனத்தைப் பற்றிய தகவலை அறிய, **தகவல் அறியும் உரிமைச் சட்டம்** அமைந்துள்ளது
4. தகவல் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6 ன்படி, தனியாகவோ அமைப்பாகவோ தகவல் பெறலாம்.
5. உரிய அலுவலகத்தில் பொதுத் தகவல் அலுவலரிடம் மனு அளிக்கலாம்.
6. மாநில, மைய அரசு அமைப்பில் தகவல் பெற, பத்து உரூபா விண்ணப்பக் கட்டணம் செலுத்தவேண்டும். நீதிமன்றக் கட்டண வில்லையையும் ஒட்டலாம்.
7. வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்பவர்கள் தகவல் பெற கட்டணம் இல்லை.

**முடிவுரை**

இவையே இச்சட்டங்களைப் பற்றிய குறிப்புகள் ஆகும்..

## குறட்டை ஒலி

**முன்னுரை**

மு.வ. அவர்கள் கதைகள் **மனித வாழ்வைச் சித்தரிப்பன.** நல்ல கருத்துக்களை வெளிப்படுத்துவன. அவரின் குறட்டை ஒலி பற்றிக் காண்போம்.

**கதைப்பொருள்**

**வடபகுதியார் செல்வம் மிக்கவர்**. குழந்தை இல்லை. அன்பும் இல்லை. **தென்பகுதியார் வறுமை மிக்கவர்**. ஏழாவது குழந்தையை ஏழைத்தாய் பெற்றாள். வடபகுதியார் வீடு எப்போதும் அமைதியாகவே இருக்கும். தென்பகுதியார் வீட்டில், எப்போதும் மனிதர் சண்டை, நாய்ச் சண்டை நிகழும். அமர்க்களமாகவும் அலங்கோலமாகவும் அசுத்தமாகவும் இருக்கும்.

**ஏழைத்தாய்** ஏழாவது **குழந்தை** பெற்றநாளிலேயே, அவர்கள் **வீட்டு நாயும்** ஐந்து குட்டிகளைப் பெற்றது. குட்டிகளின் சத்தத்தைக் கேட்ட வடபகுதி தம்பதியினர் சன்னலை மூடிவிட்டனர். **குங்குமப்பூவும் சர்க்கரையும் கலந்த பாலை** அருந்திவிட்டுத் தூங்கினர்.

நாய்க்குட்டிகளின் **தாய்** எங்கோ **காணாமல்போய்விட்டது.** அவை பசியால் கத்திக்கொண்டிருந்தன. திடீரென்று அவற்றின் குரைக்கும் சப்தம் சிறிது சிறிதாகக் குறைந்துவிட்டது. என்னவோ, ஏதோ என்று எட்டிப்பார்த்தார் எழுத்தாளர்.

**ஏழைத்தாய்** இடக்கையில் உள்ள கொட்டாங்குச்சியில் **பால்** வைத்திருந்தாள். அவள் பால்தான். அதை ஒவ்வொரு குட்டிக்கும் பஞ்சில் தோய்த்து **ஊட்டினாள்**. எல்லா **குட்டிகளும் பால் அருந்தி** உறங்கின. ஒரு நாய்க்குட்டிக்கு மட்டும் பத்தவில்லை. சப்தம் போட்டது.

ஏழைத்தாய் வலக்கையில் இருந்த பஞ்சு போன்ற துணியைத் **தன் மார்பு** அருகே கொண்டுபோய், **இடக்கையால் அழுத்தித் தன் பாலால் நனைத்து, குட்டியின் வாயில் வைத்தாள்.** மூன்றுமுறை செய்த பிறகு ஒலி அடங்கியது. அந்த இளம்தாய் சிறுவிளக்கை எடுத்துக்கொண்டு எழுந்து நடந்தாள். விளக்கொளியில் அவளுடைய முகம், **மலர்ந்த செந்தாமரைப்போல்** மகிழ்ச்சியுடன் விளங்கியது.

அன்பே இல்லாத வடபகுதியில் ஏப்ப ஒலி மாறி, குறட்டை ஒலி வந்துகொண்டிருந்தது.

**கருப்பொருள்**

உயிர்களிடத்தில் **கருணையும் அன்பும்** வேண்டும்.

**முடிவுரை**

**நல்ல பண்பே செல்வம்** என்பது இக்கதையின் முடிவு.

## ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பு

**முன்னுரை**

மு.வ. அவர்கள் கதைகள் **மனித வாழ்வைச் சித்தரிப்பன.** நல்ல கருத்துக்களை வெளிப்படுத்துவன. அவரின் குறட்டை ஒலியில் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பைப் பற்றிக் காண்போம்.

**பாத்திரப்படைப்பு**

**ஏழைத்தாய்** ஏழாவது **குழந்தை** பெற்றநாளிலேயே, அவர்கள் **வீட்டு நாயும்** ஐந்து குட்டிகளைப் பெற்றது. குட்டிகளின் சத்தத்தைக் கேட்ட வடபகுதி தம்பதியினர் சன்னலை மூடிவிட்டனர். **குங்குமப்பூவும் சர்க்கரையும் கலந்த பாலை** அருந்திவிட்டுத் தூங்கினர்.

நாய்க்குட்டிகளின் **தாய்** எங்கோ **காணாமல்போய்விட்டது.** அவை பசியால் கத்திக்கொண்டிருந்தன. திடீரென்று அவற்றின் குரைக்கும் சப்தம் சிறிது சிறிதாகக் குறைந்துவிட்டது. என்னவோ, ஏதோ என்று எட்டிப்பார்த்தார் எழுத்தாளர்.

**ஏழைத்தாய்** இடக்கையில் உள்ள கொட்டாங்குச்சியில் **பால்** வைத்திருந்தாள். அவள் பால்தான். அதை ஒவ்வொரு குட்டிக்கும் பஞ்சில் தோய்த்து **ஊட்டினாள்.** எல்லா **குட்டிகளும் பால் அருந்தி** உறங்கின. ஒரு நாய்க்குட்டிக்கு மட்டும் போதவில்லை. சப்தம் போட்டது.

ஏழைத்தாய் வலக்கையில் இருந்த பஞ்சு போன்ற துணியைத் **தன் மார்பு** அருகே கொண்டுபோய், **இடக்கையால் அழுத்தித் தன் பாலால் நனைத்து**, **குட்டியின் வாயில் வைத்தாள்.** மூன்றுமுறை செய்த பிறகு ஒலி அடங்கியது. அந்த இளம்தாய் சிறுவிளக்கை எடுத்துக்கொண்டு எழுந்து நடந்தாள். விளக்கொளியில் அவளுடைய முகம், **மலர்ந்த செந்தாமரைப்போல்** மகிழ்ச்சியுடன் விளங்கியது. .

**முடிவுரை**

இக்கதையில், **உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் கொண்டவளாக ஏழைத்தாய் படைக்கப்பட்டிருப்பதை** அறியலாம்.

## இருவேறு குடும்பங்களின் இயல்புகள்

**முன்னுரை**

மு.வ. அவர்கள் கதைகள் **மனித வாழ்வைச் சித்தரிப்பன.** நல்ல கருத்துக்களை வெளிப்படுத்துவன. அவரின் குறட்டை ஒலியில் உள்ள இருவேறு குடும்பங்களின் இயல்புகளைக் காண்போம்..

**வடபகுதியார்**

1. **வடபகுதியார் செல்வம் மிக்கவர்.**
2. இருபது ஆண்டாகியும் **குழந்தை இல்லை**. கணவன் மனைவி மட்டுமே வாழ்பவர்கள். அவர்களின் பகுதி **தூய்மையாக இருக்கும்.** பொருள்கள் வைத்தபடியே இருக்கும்.
3. ஏழைக்குடும்பமான **தென்பகுதியார் மீது வெறுப்புக்** கொண்டவர்கள்.
4. நாய்க்குட்டிகளின் பசியைப் போக்க விரும்பாமல், குங்குமப்பூ கலந்த சர்க்கரைப்பால் அருந்தும் **சுயநலம்** உடையவர்கள்.

**தென்பகுதியார்**

5. தென்பகுதியார் குடும்பம் **ஆரவாரம்** மிக்கது.
6. **குழந்தைகள்** எந்நேரமும் அடித்துச் **சண்டை**யிட்டுக்கொள்ளும்.
7. பாட்டி மருமகளைத் **திட்டிக்கொண்டே** இருப்பாள்.
8. அவர்கள் வளர்க்கும் **நாய்** வருவோரைப் போவோரைப் பார்த்துக் **குரைத்துக்கொண்டே** இருக்கும்.
9. அவர்களின் கூடத்தில் கண்ட**பொருட்கள்** கண்டபடி **சிதறிக்** கிடக்கும்.
10. இவர்களிடம் ஒன்றும் இருக்காது.
11. **நாய்க்குட்டிகளுக்குத் தன்பாலை அளித்தவள்தான்** தென்பகுதியில் வாழும் இந்த **ஏழைத்தாய்**.

**முடிவுரை**

வடபகுதியார் ஈர நெஞ்சம் அற்றவர்களாக, தென்பகுதியார் ஈர நெஞ்சம் உள்ளவர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

## இலிண்ட்கிரென் பண்பு நலன்கள்

**முன்னுரை**

சுவீடன் நாட்டைச் சேர்ந்த பேர் லாகர்குவிஸ்ட் எழுதிய அடித்தளம் சிறுகதையில் உள்ள பிச்சைக்காரர் இலிண்ட்கிரென் பண்புநலன்களைக் காண்போம்.

**பண்புநலன்கள்**

1. உலகம் தன்மேல் **கருணையுடன் இருப்பதாக** நினைப்பவர்.
2. தான் சந்திப்பது **நல்ல, அன்பான மனிதர்களை** மட்டும்தான் என்று நம்புபவர்.
3. ஏழ்மையிலும் தன் மனதையும் வீட்டையும் **சுத்தமாக** வைத்திருப்பவர்.
4. உலகில் உள்ள **நல்லவர்களை மட்டும்** நம்பி வாழ்பவர்.
5. **நம்பகமான**வராகவும் பிடித்தமானவராகவும் விளங்குபவர்.
6. இவர் பிச்சைக்காரர் என்றபோதும், மாற்றுத் திறனாளி என்றபோதும் **நல்லவராகத் திகழ்ந்ததால்** அடித்தளத்தில் வீடு கிடைத்தது.

**முடிவுரை**

நாமும் நல்லதையே நினைப்போம். அன்பாக இருப்போம்.

## ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்தல்

**(வினா எண் 34 - அ)**

**(3 மதிப்பெண்)**

1. டாடி, வர்ற சண்டெ எனக்குப் பர்த்டே, நீங்க இன்னும் எனக்குப் பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லிக் கால் பண்ணியிருக்கேன்.

   சண்டெ வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்கு. டோன்ட் வொர்ரி, டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹேப்பிதானே."

   **விடை**

   **அப்பா**, வர்ற **ஞாயிறு** எனக்குப் **பிறந்தநாள்**, நீங்க இன்னும் எனக்குப் **பிறந்தநாள் உடை** எடுக்கவில்லையே, **ஏன் அப்பா**? என்னோட **நண்பர்களையெல்லாம்** வீட்டுக்கு வரச்சொல்லி **அழைத்திருக்கிறேன்.**

   **ஞாயிறு** வர்றதுக்கு இன்னும் **ஆறு நாள்** இருக்கு. கவலைப்படாதே, **நாளை மாலை கடைக்குப்** போகலாம். இப்ப உனக்கு **மகிழ்ச்சி**தானே."

2. சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே?

   வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனால்தான் லேட். சரி...சரி..பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கெட் கிடைச்சுதா?

   பஸ் டென் தேர்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

   **விடை**

   சுரேஷ் **என்ன ஆச்சு**? ஏன் **தாமதமா** வர்றே?

   வழியிலே **ஒரே போக்குவரத்து நெரிசல்**டா, அதனால்தான் **தாமதம்**. சரி...சரி..**பேருந்து** எத்தனை மணிக்கு வரும்? **பயணச்சீட்டு** கிடைச்சுதா?

   **பேருந்து பத்து முப்பதுக்கு** வரும். **சென்ற வாரமே முன்பதிவு** செய்தாச்சு

3. பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கைத் தூக்கிப்போட்டு விட்டு மம்மி வாட்டர் என்று குரல் கொடுத்தான்.

   பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை கால்களை வாஷ் செய்துகொண்டு வா. சூடாக உனக்குப் பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன். போய் யூனிபாரம் மாற்றிக்கொண்டு வா என்றாள், அவள் தாய்.

   போம்மா என்று கூறிக்கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டிவியைப் பார்த்தான்.

   ஸ்கூல்விட்டு வந்தவுடனே எதற்கு டிவி? ஹோம் ஒர்க் செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம். என்றாள், அவள் தாய்.

   **விடை**

   பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் **புத்தகப் பையைத்** தூக்கிப்போட்டு விட்டு **அம்மா தண்ணீர்** என்று குரல் கொடுத்தான்.

   **பள்ளியில**ிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை கால்களைச் **சுத்தம்** செய்துகொண்டு வா. சூடாக உனக்குப் பிடித்த **சிற்றுண்டி** செய்து வைத்திருக்கிறேன். போய் **சீருடை** மாற்றிக்கொண்டு வா என்றாள், அவள் தாய்.

   போம்மா என்று கூறிக்கொண்டு **மின்விசிறியைச்** சுழலவிட்ட பாரி, **தொலைக்காட்சியைப்** பார்த்தான்.

   **"பள்ளிவிட்டு** வந்தவுடனே எதற்கு **தொலைக்காட்சி? வீட்டுப்பாடம்** செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம்". என்றாள், அவள் தாய்.

## அரபு எண்ணைத் தமிழாக்கம் செய்தல்

**(வினா எண் 34 - ஆ)**

**(2 மதிப்பெண்)**

1. இவை புத்தகத்தில் இயல் ஒன்றில் உள்ளன. ஏற்கெனவே ஒன்பதாம் வகுப்பில் தரப்பட்டுள்ளதால், கீழ்க்காணும் பொதுத்தேர்வில் கேட்கப்பட்ட எண்களுக்குப் பயிற்சி தரவும்.

   52, 76, 183, 194, 13 , 45, 165, 789, 45, 79, 150, 250, 25, 41, 190 ஆகிய எண்களில் பயிற்சி தரவும்

# ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்தல்

(வினாக்கள் புத்தகத்தில் உள்ளன)

**(வினா எண் 35 - அ)**

**(3 மதிப்பெண்)**

1. **வரைபடங்கள் (Maps)**

பலவகையான தகவல்களை அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைவிட வரைபடங்கள் அளிக்கின்றன. எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் முன்பே வரைபடங்களை உருவாக்கவும் பயன்படுத்தவும் மக்கள் அறிந்திருந்தனர். மூதாதையர்களின் வரைபடங்களைக் கண்டுபிடிப்பாளர்கள் கண்டறிந்தனர். வரைபடங்கள் சிலவேளை பாறைகளில் வடிக்கப்பட்டிருக்கும்.

2. **மரங்கள் (Trees)**

மரங்கள் நமக்கு மிகவும் பயன்படக்கூடியவை. விறகையும் மரத்துண்டங்களையும் அவை நமக்கு அளிக்கின்றன. அறைகலன்கள், நாற்காலிகள், மேசைகள் செய்ய மரத்துண்டங்கள் பயன்படுகின்றன. சில மரங்களின் விதைகளிருந்து எண்ணெய் பெறுகிறோம். சில மரங்களின் இலைகள், பழங்கள் மருந்து தயாரிக்கப்பயன்படுகின்றன.

3. **அதிகாலையில் எழுதல் (Early to Bed)**

சீக்கிரமாக இரவில் தூங்கி, விரைவாக அதிகாலையில் எழுந்துகொள்வது என்பது ஒருவனை நலமுடையவனாக, வளமுடையவனாக, அறிவுள்ளவனாக வைக்கிறது. தாமதமாக எழுபவரைவிட, அதிகாலையில் எழுபவருக்குத் தினசரி வேலைகளில் அதிக காலமும் ஊக்கமும் கிடைக்கிறது. தனக்குள் அவர் சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் காண்கிறார். படிப்பதற்கு அதிகாலையே சிறந்தது. மூளை புத்துணர்ச்சியுடன் இருப்பதால் கடினமான பாடம் எளிமையாகும்.

4. **கடிதம் எழுதும கலை (Letter writing)**

கடிதம் எழுதுவது ஒரு கலை. சிறந்த பயிற்சியினால் அது முழுமையாகும். சில தகவல்களைப் பரிமாறிக்கொள்ள நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எழுதப்படுகிறது. இவை ஓர் உரையாடல். இரண்டு நபர்களுக்குள்ளான அந்தரங்கமான, நேரடியான செய்திகள் அவற்றில் இருக்கும். வாசிக்கத்தகுந்த, தெளிவான கடிதத்தை எப்படி எழுதுவது என்பது கற்றிந்தவருக்குத் தெரியும்.

5. **தொலைக்காட்சி (Televisiion)**

நவீன இந்தியாவின் அதிசயம்தான் தொலைக்காட்சி. கிராமப்புறத்தாருக்குத் தேவையான கல்வி, உடல்நலம், விவசாயம், குடும்பக்கட்டுப்பாடு நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. வழக்கமான கால இடைவெளிகளில் விருப்பம்தரும் நாடகங்களும் திரைப்படங்களும் வெளியிடப்படும். விளம்பரங்களுக்காகவும் தொலைக்காட்சி பயன்படுத்தப்படுகிறது.

6. **உணவு (Food)**

வாழும் உயிரினங்களுக்கு உணவு இன்றியமையாதது. உணவில்லாமல் ஒரு மனிதன் நீண்டகாலம் வாழ இயலாது. தனக்கான அளவில் உணவை ஒவ்வொரு மனிதன் உண்ணத்தான்வேண்டும். குறைந்த உணவு உண்பவர் உடல்நலத்தில் குறைவு ஏற்பட்டு, நோய்வாய்ப்படுவார். எனவே, வாழ்வதற்குத் தேவையான உணவை ஒவ்வொரு மனிதனும் உண்ணவேண்டும்.

7. **கணினி (Computers)**

இது கணினி காலம். இவை சராசரி வாழ்வில் ஓர் அங்கம். தினசரி வணிகம், தொழிற்சாலைகள், நிறுவனம் தொடர்பாகவும், அரசு நிறுவனங்களில் அளவற்ற தகவல் பராமரிப்புத் தேவைப்படுகிறது. மிகச்சிறந்த அதிவேகத் தகவல்பராமரிப்புக் கருவிதான் கணினி.

8. **காந்தியடிகள் (Gandhiji)**

எல்லாவற்றைவிட காந்தியடிகள் உண்மையையே விரும்பவும் மதிக்கவும் செய்தார். உண்மையைக் கடைப்பிடிக்கவே வாழ்வு முழுவதும் போராடினார். வாய்மையைவிட மிகச்சிறந்த கடவுள் வேறில்லை என்பதை உண்மையைச் சோதித்து அறிந்தார். நம் எண்ணம், சொல், செயல் யாவும் உண்மையாக இருக்கவேண்டும் என்று கற்பித்தார். எதைக் கடைப்பிடித்தாரோ அதையே போதித்தார்.

9. **பள்ளிகள் (Schools)**

மாணவர்களுக்குப் பாடம் போதிப்பதோடு பள்ளிகள் நிறுத்திக்கொள்வதில்லை. இன்னும் செயல்படுகின்றன. இங்கேதான் மாணவர்களும் மாணவிகளும் பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொள்கின்றனர். முறையான வழியில் நடக்கக் கற்கின்றனர். மாணவர்கள் தவறு செய்யும்போது திருத்தப்படுகிறார்கள்.

**10. நூலகம் (Library)**

புத்தகங்கள் வாசிக்க சிறந்த இடம் நூலகம் ஆகும். ஒவ்வாரு நூலகத்திலும் நூலகர் இருப்பார். அவர்தான் நூல்களைப் பராமரிப்பவர். ஆங்கிலத்திலும தமிழிலும் கதைப்புத்தகங்கள் பெற்று இருக்கும். வணிகவியல், கணக்குப்பதிவியல், அறிவியல் நூல்களும் இருக்கும். தமிழிலும் ஆங்கிலத்திலும் செய்தித்தாள்களும் இதழ்களும் இருக்கும். அவற்றை நாம் அமைதியாக வாசிக்கவேண்டும். அமைதியான வாசிப்புக்கான இடம் இது. இரண்டு வாரத்திற்குப் புத்தகத்தைக் கடன் பெற்றுச் செல்லலாம். ஒவ்வொருவருக்கும் பயனுள்ளதுதான் நூலகம்.

**ஆங்கிலப் பழமொழியைத் தமிழாக்கம் செய்தல்**
**(வினா எண் 35 - ஆ)**
**(2 மதிப்பெண்)**

| | |
|---|---|
| 1. Old is gold | காலம் பொன் போன்றது |
| 2. No pain. No gain | உழைப்பில்லாமல் ஊதியம் இல்லை |
| 3. Knowledge is power | அறிவே ஆற்றல் |
| 4. Haste Makes waste | பதறின காரியம் சிதறும் |
| 5. Self help is the best help | தன் கையே தனக்குதவி |
| 6. A friend in need is a friend indeed. | ஆபத்தில் உதவுபவனே உற்ற நண்பன். |
| 7. All that glitters is not gold. | மின்னுவதெல்லாம் பொன் அல்ல. |
| 8. Time is gold. | காலம் பொன்போன்றது. |
| 9. The Face is the index of the mind | அகத்தின் அழகு முகத்தில் தெரியும். |
| 10. Look before you leap | ஆழம் அறியாமல் காலை விடாதே. |
| 11. Live and let live. | வாழ் அல்லது வாழவிடு. |
| 12. Art is long but life is short. | கல்வி கரையில , கற்பவர் நாள் சில. |
| 13. Efforts never fail. | முயற்சி திருவினையாக்கும் |
| 14. Even a pin is good for nothing | சிறு துரும்பும் பல்குத்த உதவும் |
| 15. Failure is the stepping stone to success. | முயற்சி திருவினையாக்கும் |
| 16. Work is woship | செய்யும் தொழிலே தெய்வம். |
| 17. Health is wealth | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். |
| 18. Diamond cut diamonds | முள்ளை முள்ளால் எடு |

## கதையை நிறைவு செய்தல் அல்லது கவிதை எழுதுதல்

**(வினா எண் 36)**
**(5 மதிப்பெண்)**

கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.(பொதுத் தேர்வில் கீழ்க்காணும் ஒன்றிலிருந்து வரும்)

**மழை**

மழையே மழையே வான் மழையே!
வானின் அமுதே வான்மழையே!
வானம் பார்த்த பூமியின்
தாகம் தீர்க்க வா மழையே!
பயிருக்கு உயிராய் வா மழையே!
பருவம் தவறாது வா மழையே!
அளவாய்ப் பெய்ய வா மழையே!
வளம் தர புவிக்கு வா மழையே.!

**நட்பு**

அன்பின் சிகரம் நட்பு
இன்ப ஊற்றாம் நட்பு
துன்பம் களைவது நட்பு
துயரினில் ஆறுதல் நட்பு
வளர்ச்சியில் துணைதான் நட்பு

தளர்ச்சிக்குத் தோள்தரும் நட்பு
உயிருக்கு உயிரானது நட்பு
உனக்காய் உயிர் தரும் நட்பு

**குழந்தை**

குழந்தை சிரிப்பில் இறைவன் தெரிவான்
பொக்கைவாய்ச் சிரிப்பில் பூக்கள் மலரும்
குழறும் மொழியில் குழலும் தோற்கும்
வாயில் வழியும் கூழும் இனிக்கும்
அழகு நடையில் பூமியும் குளிரும்
குன்றாகச் செல்வம் கொட்டினாலும்
குழந்தைச் செல்வத்தில் தோற்கும்
குழந்தை என்ற ஒன்று இல்லை என்றால்
இந்த உலகத்தில அன்பை நாம் காணமுடியாது.

**பள்ளி**

அறிவை வளர்க்கும் பள்ளி
ஆற்றல் தரும் பள்ளி
இன்பம் தரும் பள்ளி
ஈகை காட்டும் பள்ளி
உலகம் காட்டும் பள்ளி
ஊக்கம் தரும் பள்ளி
எளிமை கற்பிக்கும் பள்ளி
ஏற்றம தரும் பள்ளி
ஐயம் நீக்கும் பள்ளி
வைகம் வாழ வைக்கும் பள்ளி

**முயற்சி**

தோல்வி கண்டவன்
துவண்டுவிடாமல்
ஏற்றம் காண
எதிர்நீச்சல் போடுவதும்
மீன் பிடிக்க
தூண்டில் வீசி
காத்திருப்பதும்
வெற்றி காண
அயராது பாடுபடுவதுமே
முயற்சி

## பாநயம் பாராட்டுதல்

**(வினா எண் 37)**
**(5 மதிப்பெண்)**

**1**

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
 மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
 சக மக்கள் ஒன்றென்ப துணர்வத ற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
 இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
 புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்
 - பாரதிதாசன்

**நூல் நிலையம்**

**திரண்ட கருத்து**

மனிதர்கள் அன்பு நெறி காணவும், மனம் விரிவடையவும், சமத்துவ உணர்வு ஏற்படவும், உயர்ந்த எண்ணம் உருவாகவும் அமைய வேண்டியது நூல்நிலையம் ஆகும். மக்களுக்குப் புதுவாழ்வு ஏற்படவேண்டுமென்றால் நாடு முழுவதும் நூல்நிலையம் ஏற்படவேண்டும்.

**மையக் கருத்து**

நூல்நிலையங்களை நாட்டில் அமையவேண்டும்.

**மோனை நயம்**

சான்று - மனிதரெலாம், மனோபாவம், இனிதினிதாய், இலகுவதாய்,
புனிதமுற்று, புத்தகசா

**எதுகை நயம்**

சான்று - மனிதரெலாம், மனிதரெலாம்
மனோபாவம், தனிமனிதத்

**பாநயம்**

ஒவ்வொரு அடியிலும் எட்டு சீர்கள் பயின்றுள்ளதால், இது **எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்** ஆனது.

**அணி நயம்**

இப்பாடலில் **"போல்"** என்று சீர் வெளிப்படையாக வந்துள்ளது. எனவே இது **உவமையணி** ஆகிறது.

**தலைப்பு நயம்**

இப்பாடலின் தலைப்பு நூல்நிலையம் அல்லது புத்தகச்சாலை ஆகும்.

**2**

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்க்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செய்யினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாதநிலைமையும்வேண் டுவனே.

- வள்ளலார்

**வேண்டும் வேண்டும்**

**திரண்ட கருத்து**

தந்தையே என் வேண்டுதலைக்கேட்டு அருள்புரியவேண்டும். ஆருயிர்க்கு அன்பு செலுத்துதல் வேண்டும். எவ்விடத்திலும் உன் புகழைப்பாடுதல்வேேடும். சிவ மார்க்கம் செழுத்தோங்க அருட்சோதி தோன்றவேணடும். என் தவறை மன்னித்துப் பிரியாமல் இருக்கவேண்டும்.

**மையக் கருத்து**

இவ்வுலகத்தில் அருட்சோதி பரப்பவேண்டும்.

**மோனை நயம்**

சான்று - அப்பாநான், எப்பாரும், தப்பேது
ஆருயிர்க எந்தைநின் தலைவநினைப்

**எதுகை நயம்**

சான்று - அப்பாநான், எப்பாரும்
செப்பாத, தப்பேது

**இயைபு நயம்**

சான்று - புரிதல் **வேண்டும்**
அன்பு செயல் **வேண்டும்**

**பாநயம்**

வாழ்க்கைக்கு அழகு பாப்பா
கவிதைக்கு அழகு பா பா

ஒவ்வொரு அடியிலும் எட்டுச் சீர்கள் பயின்றுள்ளதால், இது **எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்** ஆனது.

**அணி நயம்**

ஒரு செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்திக் கூறுவது அணி எனப்படும். இப்பாடலில் இயல்பாகக் கூறியுள்ளதால் இது **இயல்பு நவிற்சி அணி** ஆகிறது.

**தலைப்பு நயம்**

இப்பாடலின் தலைப்பு **வேண்டும் வேண்டும்** ஆகும்.

**3**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.
- பாரதியார்

**வேண்டும் வேண்டும்**

**திரண்ட கருத்து**

பிறநாட்டு அறிஞர்களின் நூல்களைத் தமிழில் பெயர்க்கவேண்டும். சாகாவரம் பெற்ற புதிய நூல்களை எழுதவேண்டும். நம்முடைய பழங்கதைகளைப் பேசிப் பயனில்லை. நம்முடைய எழுத்துகள் திறமையானது எனில் அதை வெளிநாட்டவர்கள் வரவேற்கவேண்டும்.

**மையக் கருத்து**

சிறந்த நூல்களை எழுதுவது, மொழிபெயர்த்துப் பாராட்டுவது.

**எதுகை நயம்**

சான்று - பிறநாட்டு, இறவாத
மறைவாக, திறமான

**இயைபு நயம்**

சான்று - பெயர்த்தல் **வேண்டும்**
இயற்றல் **வேண்டும்**

**பாநயம்**

ஒவ்வொரு அடியிலும் ஆறு சீர்கள் பயின்றுள்ளதால், இது **அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்** ஆனது.

**அணி நயம்**

ஒரு செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்திக் கூறுவது அணி எனப்படும். இப்பாடலில் இயல்பாகக் கூறியுள்ளதால் இது **இயல்பு நவிற்சி அணி** ஆகிறது.

**தலைப்பு நயம்**

இப்பாடலின் தலைப்பு **படைப்பின் அழகு** அல்லது **வேண்டும் வேண்டும்** ஆகும்.

**4**

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலை உடை கதருடையாய்த் திகழ வேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின்மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்
- கவிமணி

**வேண்டும் வேண்டும்**

**திரண்ட கருத்து**

பச்சைக்கிளிகள் பாட, பாலைவனங்கள் சோலையாகவேண்டும். தொழிற்சாலைகளில் பலத் தொழில்கள் பெருகி, சபைகளில் தமிழ் வாழவேண்டும். கதருடையுடன், நாட்டுப்பற்று வளரவேண்டும். வேலையில்லா திண்டாட்டம் அழிந்து, நாம் வெற்றி அடையவேண்டும்.

**மையக் கருத்து**

நிலம், மொழி, தொழிலில், வேலையில் நமது முன்னேற்றம்.

**மோனை நயம்**

சான்று - பாலைனம், சாலைகளிற், பசுங்கிளிகள்
பசுங்கிளிகள் சபைகளிலே பாட

**எதுகை நயம்**

சான்று - பாலைவனம், பாலைவனம்,
சாலைகளிற், சோலைவன,
சீலை, சாலைகளிற்
வேலையில்லாத் பலதொழிலும்

**இயைபு நயம்**

சான்று - மாக **வேண்டும்** பெருக **வேண்டும்**
பாட **வேண்டும்** ஒழிய **வேண்டும்**

**பாநயம்**

ஒவ்வொரு அடியிலும் எட்டு சீர்கள் பயின்றுள்ளதால், இது **எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்** ஆனது.

**அணி நயம்**

ஒரு செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்திக் கூறுவது அணி எனப்படும். இப்பாடலில் இயல்பாகக் கூறியுள்ளதால் இது **இயல்பு நவிற்சி அணி** ஆகிறது.

**தலைப்பு நயம்**

இப்பாடலின் தலைப்பு படைப்பின் அழகு அல்லது **வேண்டும் வேண்டும்** ஆகும்.

ஆகியவை பயின்றுள்ளன

## படிவம் நிரப்புதல்

**வினா எண் 38**

**(5 மதிப்பெண்)**

புத்தகத்தில் உள்ள படிவங்கள் மற்றும் பொதுத்தேர்வு வினாக்களில் கேட்கப்பட்ட படிவங்களை நிரப்பிப் பயிற்சி மேற்கொள்ளலாம். தவிரவும் தொடர்வண்டி இருக்கை முன்பதிவு - ரத்து படிவத்தைப் பொறுத்தவரை, வினாப்பகுதியைக் கவனித்துத் தேர்வருக்கான பெயரைக் (தேர்வர் பெயர் வினாப்பகுதியில் இருக்கும்) கவனமாக எழுதவும். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பெயர்களை அதற்குரிய கட்டத்தில் குறிப்பிடவும்.

## வாழ்வியல் சூழல் வினா விடை

**வினா எண் 39**

**(5 மதிப்பெண்)**

1. மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கின்றான். சில நாட்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்ற பெற்றோர் நினைக்கின்றனர்.

**பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?**

சரி.

**நாம் எப்படிப்பட்ட நண்பர்களோடு நட்புகொள்ள வேண்டும்?**

நல்ல நண்பர்களுடன் நட்புகொள்ளவேண்டும்.

**இச்சூழலில் பயன்படுத்தவேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?**

சிக்கல்களை எதிர்கொள்ளுதல், தீர்வு காணுதல்

2. பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்றுவிடப் பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாகப் படித்துக்கொண்டிருந்தாள். பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டிற்கு வருகிறார். தநதை வெளியூர் சென்றிருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவள் அதைக் கேட்காமல், அவளிடம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

**அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள்?**

அவரிடம் பேசுவதை நிறுத்திவிட்டு, தந்தை வந்தபிறகு பேசிக்கொள்ளுங்கள் என்று சொல்வாள்.

**நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?**

அவரிடம் பேசுவதை நிறுத்திவிட்டு, தந்தை வந்தபிறகு பேசிக்கொள்ளுங்கள் என்று சொல்வேன்.

3. இலக்கியா படிப்பில் படுசுட்டி. அவள்தான் வகுப்பில் எப்போதும் முதலாவதாக வருவாள். அவளுடைய தோழிகள் அவளுக்கென்ன கவலை? அவள் அம்மா ஓர் ஆசிரியர். அவளுக்குப் பாடத்தில் எந்த ஐயம் ஏற்பட்டாலும் உடனே தீர்த்துவிடுவார். எனவே, அவள் முதல் மதிப்பெண் பெறுவதில் வியப்பேதும் இல்லை என்று கூறுவர். பள்ளியில் ஆண்டுத்தேர்வுப் படிப்பதற்காக ஒருவாரம் விடுமுறை அளித்தார்கள். இலக்கியா வழக்கம்போல் படிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அவளுடைய அம்மா திடீரென்று மயக்கமடைந்துவிட்டார்கள் என்றும் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் அம்மாவுடன் பணியாற்றும் ஆசிரியர் கூறினார். இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானாள்.

**இலக்கியாவின் முன்னேற்றத்திற்க யார் காரணம்?**

அவளுடைய அம்மா.

**இலக்கியாவின் அம்மாவை எதற்காக மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள்?**

அவளுடைய அம்மாவிற்கு மயக்கம் ஏற்பட்டதால் மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள்.

**அம்மாவுக்கு ஏற்பட்ட நிலை கண்டு இலக்கியாவின் நிலை என்ன?**

மன அழுத்தத்திற்கு ஆளானாள்.

4. இரண்டு நாள் பெய்த மழையின் காரணமாக, அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால் கதிரவனின் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால் தன்னைக் கண்டிப்பார்கள் என்று கதிரவனுக்குத் தெரியும். திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்று அவன் நினைக்கிறான்.

**இந்நிலையில் கதிரவன் தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?**

பெற்றோருக்குத் தெரிந்தால் வருத்தப்படுவார்கள் என்று கட்டுப்படுத்துவான்.

**கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?**

அவ்வாறு செல்வது தவறு என்று எடுத்துரைத்து, திரைப்படம் செல்வதைத் தடுப்பேன்.

5. எழிலரசனும் தமிழரசனும் நெருங்கிய நண்பர்கள். எழிலரசனுக்குத் தமிழரசன் மட்டுமே நண்பன் ஆனால் தமிழரசனுக்கோ வகுப்பில் மட்டுமின்றி பள்ளியிலும் அனைவரும் நண்பர்கள். பார்க்கும் யாவரிடத்திலும் அன்பாகவும் நட்பாகவும் நடந்துகொள்வான். தன்னால் முடிந்த உதவிகளும் செய்வான். எழிலரனும் நல்ல மாணவன்தான். ஆனால் தானாகச் சென்று பழகமாட்டான். வினாவுக்கு மட்டுமே விடை சொல்வான். தமிழரசனிடம் எல்லாரும் நெருங்கிப் பழகுவது எழிலரசனுக்கு வேதனை தந்தது.

**இவர்களில் யாரைப்போல் இருப்பது நல்லது?**

தமிழரசன் போல் இருப்பது நல்லது.

**தன்னிடம் அனைவரும் நெருங்கிப் பழக எழிலன் என்ன செய்யவேண்டுமென்று நீ நினைக்கிறாய்?**

எழிலரசன் மற்றவர்களுடன் முதலில் நெருங்கிப்பழக வேண்டும்.

**உங்களுக்கு நண்பர்கள் உண்டா? எத்தனை பேர்?**

எனக்கு நண்பர்கள் உண்டு. பத்து பேர்.

6. பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள்தோள்மீது யாரோ கைவைப்பதாக உணர்கிறீர்கள். திரும்பிப் பார்த்தால் உங்களுக்கு அறிமுகமானவர்தான்.

**அப்போது உங்கள் செயல் எப்படி இருக்கும்?**

மென்மையாக விலகிச் செல்வேன்.

**இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்டுவாய்?**

மென்மையாக விலகிச் செல்வேன்.

**இதுபோன்ற நிகழ்வு உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?**

இல்லை.

7. பதினொன்றாம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகிறது. தேவி அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்துவிட்டன. ஆனால் அவள் பெற்றோர் அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.. "நான்சொன்னது சொன்னதுதான். நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்யவேண்டியதுதான்." என்று கூறியவாறு அவளுடைய தந்தை வெளியே சென்றுவிட்டார். "அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்" என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள் தேவி.

**இத்தகைய நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள்?**

படிப்பை நிறுத்தித் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று முடிவு எடுப்பாள்.

**உங்களுக்கு இப்படியொரு நிலை ஏற்பட்டால் நீங்கள் எப்படி தீர்வு காண்பீர்கள்?**

படிப்பேன். திருமணம் செய்து வைப்பதைத் தடுப்பேன்.

**இச்சூழலில் பயன்படுத்தவேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?**

அறிதல், பேசுதல், உணர்த்துதல், முடிவு எடுக்கும் திறன்.

8. பூங்குழலி எல்லாரிடமும் அன்பாகப் பழகுவாள். அவள் வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களிடம் தன்மையாகப் பேசுவாள். அதனால் அவளை எல்லாருக்கும் பிடிக்கும். அவள் எப்போதும் புன்முறுவலோடு வளைய வருவாள். வீட்டிற்கு வருபவர்களை வாங்க, வாங்க உட்காருங்க, அம்மா வந்திடுவாங்களன்று வரவேற்பாள். அவளைப் புன்னகைப் பூங்குழலி என்றுதான் எல்லாரும் அழைப்பார்கள். அவர்கள் அவளை அழைப்பது சரிதானா, நீங்களே சொல்லுங்கள்.

**பூங்குழலியின் பண்பை நீ ஏற்றுக்கொள்கிறாயா?**

ஆம்.

**உங்கள் வீட்டிற்கு யாராவது வந்தால், நீ எவ்வாறு வரவேற்பாய்?**

சிரித்த முகத்துடன், அன்புடன் வரவேற்பேன்.

**பூங்குழலியைப்போல் நீயும் எல்லாரிடமும் நன்கு பழகுகின்றாயா?**

ஆமாம். நன்றாகப் பழகுவேன்.

9. விழிமாற்றுத் திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக்கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் கடந்து செல்கின்றனர். ஆனால், அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

**இதுபோன்ற சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?**

விழிமாற்றுத் திறனாளிக்கு உதவுவேன்..

**பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?**

அன்பு.

## கடிதம் எழுதுதல்

**வினா எண் 40**

**(10 மதிப்பெண்)**

விண்ணப்பம் ஒன்றாகவும், கடிதம் ஒன்றாகவும் கேட்கப்படும். அதில் சில வகைமாதிரிகளை மட்டும் படித்தால் போதுமானது. இவற்றில் இருந்து ஒன்று வந்துவிடும். பொதுத் தேர்வு வினாப்பகுதிகளில் கேட்கப்பட்டவை மீண்டும் கேட்கப்படுகின்றன. எனவே கீழ்க்காணும் ஐந்து வினாக்களில் மட்டும் பயிற்சி தந்தால் போதுமானது.

**1. நும் ஊரில் மின்விளக்கு வசதி வேண்டி மின்வாரியத் தலைவருக்குக் விண்ணப்பம் வரைக.**

**அனுப்புநர்** **x x x**

**ஊர்ப் பொதுமக்கள்** (தேர்வு நாள்எழுதுக)

1, புதுத் தெரு,

XXX

**பெறுநர்**

**மின்வாரியத் தலைவர்,**

மின்வாரிய அலுவலகம்,

XXX

**ஐயா,**

**பொருள்:** **மின்விளக்கு வசதி** வேண்டி – விண்ணப்பம்

-- ---

வணக்கம். எங்கள் கிராமத்தில் ஏறத்தாழ 800 மக்கள் வாழ்கின்றனர். சுமார் 15 தெருக்கள் உள்ளன. எங்கள் கிராமத்தில் மின்விளக்கு வசதியில்லாததால் **அன்றாட வாழ்வு பாதிப்படைகிறது. வயதானவர்களும் குழந்தைகளும் மாணவர்களும் துன்பத்திற்கு ஆளாகிறார்கள்.** மின்வசதி இல்லாததால் இரவில் தூங்க முடிவதில்லை. மாணவர்களால் படிக்க முடியவில்லை. இரவில் சாலையில் நடப்பதற்குப் பயமாக இருக்கிறது.

எனவே மிக விரைவில் நடவடிக்கை எடுத்து, எங்கள் கிராமத்திற்கு மின்விளக்கு வசதி செய்துத் தரும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

நன்றி,

இப்படிக்கு,
**XXX**
**(ஊர்ப்பொதுமக்கள்)**

**உறைமேல் முகவரி**

**பெறுநர்**
மின்வாரியத் தலைவர்,
மின்வாரிய அலுவலகம்,
XXX

**2. நும் ஊரில் குடிநீர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.**

**அனுப்புநர்** **x x x**

**ஊர்ப் பொதுமக்கள்** (தேர்வுநாள் எழுதுக)

1, புதுத் தெரு,

XXX

**பெறுநர்**

**ஊராட்சி ஒன்றிய ஆணையர்,**

ஊராட்சி ஒன்றிய ஆணையர் அலுவலகம்,

XXX

**ஐயா,**

**பொருள்:** **குடிநீர் வசதி** வேண்டி – விண்ணப்பம்

-- ----

வணக்கம். எங்கள் கிராமத்தில் ஏறத்தாழ 800 மக்கள் வாழ்கின்றனர். சுமார் 15 தெருக்கள் உள்ளன. எங்கள் ஊர் மக்கள் அன்றாடத் தேவைக்கு **வெகுதொலைவில் உள்ள ஊருக்குச் சென்றுதான் நீர்** கொண்டு வர முடிகிறது. அவ்வூரில் **நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டால்**, எங்கள் அன்றாட வாழ்வில் பாதிப்பு ஏற்படுகிறது.

எனவே, அன்றாடத் தேவைக்காக எங்கள் ஊருக்கென்று குடிநீர் வசதி செய்துதரும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

நன்றி,

இப்படிக்கு,
XXX
**(ஊர்ப்பொதுமக்கள்)**

**உறைமேல் முகவரி**

| |
|---|
| **பெறுநர்**<br>**ஊராட்சி ஒன்றிய ஆணையர்,**<br>ஊராட்சி ஒன்றிய ஆணையர் அலுவலகம்,<br>XXX |

**3. நும் ஊரில் மேடு பள்ளமுமாகக் காட்சியளிக்கும் சாலையைச் செப்பனிட்டுத் தருமாறு நெடுஞ்சாலைத்துறை இயக்குநருக்குக் கடிதம் எழுதுக.**

x x x
(தேர்வுநாள் எழுதுக)

**அனுப்புநர்**
**ஊர்ப் பொதுமக்கள்**
1, புதுத் தெரு,
XXX

**பெறுநர்**
**இயக்குநர்,**
நெடுஞ்சாலைத்துறை,
XXX

**ஐயா,**

**பொருள்:** **சாலையைச் செப்பனிட** வேண்டி - விண்ணப்பம்

-- ----

வணக்கம். எங்கள் கிராமத்தில் ஏறத்தாழ 800 மக்கள் வாழ்கின்றனர். சுமார் 15 தெருக்கள் உள்ளன. எங்கள் ஊருக்குத் தார்ச் **சாலையைப் போட்டு ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன**. சமீபத்தில் **பெய்த கடும் மழையால் சாலைகள் சேதமடைந்துள்ளன**. சாலைகள் முழுவதும் குண்டும் குழியுமாக, மேடுபள்ளமாக ஆகிவிட்டன. கற்கள் பெயர்ந்துவருகின்றன.

சாலையில் செல்லும்பொழுது கால்களில் **கற்கள் குத்திக் காயம்** ஏற்படுத்துகின்றன. மிதிவண்டியையோ அல்லது மற்ற **வண்டிகளையோ ஓட்டமுடியவில்லை**. இரவில் சாலைமேல் **நடப்பதற்குப் பயமாகவும் சிரமமாகவும்** இருக்கிறது. நகரத்திற்குச் செல்லும்பாதை இது என்பதால், அன்றாடப் பயன்பாட்டிற்கு ஏற்றதாக இல்லை.

எனவே, அன்றாடத் தேவைக்காக எங்கள் ஊர்ச் சாலையைச் செப்பனிட்டுத் தருமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

நன்றி,

இப்படிக்கு,
XXX
**(ஊர்ப் பொதுமக்கள்)**

**உறைமேல் முகவரி**

| |
|---|
| **பெறுநர்**<br>**இயக்குநர்,**<br>நெடுஞ்சாலைத்துறை,<br>XXX |

**4. பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.**

x x x
(தேர்வு நாள் எழுதுக)

**அன்புள்ள நண்பா,**

வணக்கம். நான் நலம். உன் வீட்டில் அனைவரும் நலமா?

முதலில் வாழ்த்துகள் சொல்லிக்கொள்கிறேன். இந்த வருடம் நடந்த **பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நீ, மாநிலத்தில் முதலிடம் பெற்றிருக்கிறாய்** என்ற செய்தி கிடைத்தபோது நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

எல்லா வருடத்தையும்விட இந்த வருடம் 499/500 மதிப்பெண் பெற்றுச் சாதனை புரிந்துவிட்டாய். இச்சாதனையை யாராலும் இனிமேல் முறியடிக்க முடியாது என்று நினைக்கிறேன். உன்னுடைய **ஊக்கமும் அயராத உழைப்பும்தான் உனக்கு வெற்றியைத் தேடித் தந்தது.**

உன் **குறிக்கோளை அடைந்து, உன் பள்ளிக்கும் பெற்றோருக்கும் நீ பெருமை சேர்த்துள்ளதை** நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். என் நண்பர்களிடம் உன்னைப் பற்றிப் பேசி மகிழ்ச்சி அடைகிறேன்.

இதேபோன்று படித்துப் பன்னிரண்டாம் வகுப்பிலும் மாநில அளவில் சாதனை செய்வாய் என விரும்புகிறேன்.

வீட்டில் அனைவரையும் கேட்டதாகச் சொல்லவும்.

**உன் அன்பு நண்பன்,**
XXX

**உறைமேல் முகவரி**

| |
|---|
| **பெறுநர்**<br>XXX,<br>1 புதுத் தெரு,<br>XXX |

**5. நும் ஊரில் பேருந்து வசதி வேண்டி போக்குரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.**

**அனுப்புநர்**

**ஊர்ப் பொதுமக்கள்**
1, புதுத் தெரு,
XXX

**x x x**
(தேர்வு நாள் எழுதுக)

**பெறுநர்**

**மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
போக்குவரத்துக் கழகம்,
XXX

**ஐயா,**

**பொருள்:** **போக்குவரத்து வசதி** வேண்டி – விண்ணப்பம்
-- ----

வணக்கம். எங்கள் கிராமத்தில் ஏறத்தாழ 800 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் மிகத் **தூரத்தில் இருக்கும் நகரத்திற்குச்** சென்று **படித்துவிட்டும், வேலைக்குச் சென்றுவிட்டும் வருகின்றனர்**. கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் சென்று வருவதால் **படிப்பிலும் வேலையிலும் கவனம் செலுத்தமுடியவில்லை**. அவசர உதவிக்குக்கூட வாகன வசதி இல்லை.

எனவே மிக விரைவில் நடவடிக்கை எடுத்து, எங்கள் கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்துத்தரும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

நன்றி,

இப்படிக்கு,
XXX
**(ஊர்ப் பொதுமக்கள்)**

**உறைமேல் முகவரி**

| |
|---|
| **பெறுநர்**<br>**மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**<br>போக்குவரத்துக் கழகம்,<br>XXX |

**6. கண்டு களித்த இடம் பற்றி நண்பனுக்குக் கடிதம்**

**x x x**
**(தேர்வு நாள் எழுதுக)**

**அன்புள்ள நண்பா,**

வணக்கம். நான் நலம். உன் வீட்டில் அனைவரும் நலமா?

சென்ற வாரம் எங்கள் பள்ளியில் சுற்றுலா அழைத்துச் சென்றார்கள். எங்கே தெரியுமா? பசுமைப் பரவிய தஞ்சாவூர்தான்.

தமிழின் பெருமைகளைப் பறைசாற்றும் **தஞ்சாவூருக்கு** அதிகாலை சென்றடைந்தோம். முதலில் நாங்கள் பார்த்தது **சரஸ்வதி மகால்தான்**. எவ்வளவு பெரியது! **சரபோஜி மன்னர்காலத்தைச்** சேர்ந்ததாம். **பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள், பழங்கால அரண்மனைகள்** என்று பழைமையான செய்தியுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

அன்று மாலை, பெரிய கோவிலை அடைந்தோம். பெயருக்கேற்றபடி **பெரியகோவில்**தான். அடேயப்பா! கற்களால் ஆன அந்தக் கோவில்முன் எவ்வளவு அழகான, பெரிய நந்தி! இக்கோயில் பிற்காலச் **சோழர்களால்** கட்டப்பட்டதாம். **நிழல்படாத விமானம், மகா நந்தி, கருவூரார் சன்னதி, வராகி அம்மன்** சன்னதி என்று பல சன்னதிகள் அங்கே உள்ளன. இந்தக் காலத்தல் இப்படியொரு கோவில் கட்டுவது என்பது நடக்காத காரியம். கோவிலைச் சுற்றி எவ்வளவு **கல்வெட்டுகள்! சிற்பங்கள்! ஓவியங்கள்!** எல்லாவற்றையும் என் ஆசிரியர் விளக்கினார்.

வரலாற்றுப் பாடத்தில் உள்ள இந்தக் கோவிலை நேரடியாகப் பார்த்தபொழுது, **பாடம் எளிமையாகப் புரிந்தது**. புதிய தகவல்களைப் பெறமுடிகிறது. இதுபோன்று நீயும் உங்கள் பள்ளியில் நடக்கும் கல்விச் சுற்றுலாவில் கலந்துகொள்.

விரைவில் பதில் எழுது.

**உன் அன்பு நண்பன்,**
XXX

**உறைமேல் முகவரி**

| |
|---|
| **பெறுநர்**<br>XXX,<br>1 புதுத் தெரு,<br>XXX |

**7. தட்டச்சர் பணிக்குத் தன் விவரப்பட்டியல் தயாரித்து எழுதுக.**

**அனுப்புநர்** x x x
XXX, (தேர்வு நாள் எழுதுக)
1, புதுத் தெரு,
XXX

**பெறுநர்**
**மேலாண்மை இயக்குநர்**,
XXX கம்பெனி,
XXX

**ஐயா,**

**பொருள்:** **தட்டச்சர் பணி வேண்டி** – விண்ணப்பம்
- - - - - -

வணக்கம். தங்களுடைய அலுவலகத்தில் தட்டச்சர் பணி காலியாக இருப்பதை நாளிதழில் கண்டேன். அப்பணிக்கு விண்ணப்பித்துள்ளேன். தங்கள் அலுவலகத்தில் பணி புரிய எனக்குத் தகுதி இருப்பின். தாங்கள் தயை கூர்ந்து என்னை அழைக்க விரும்புகிறேன். இக்கடிதத்துடன் தன்-விவரப் பட்டியல் இணைத்துள்ளேன்.

நன்றி, இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
XXX

**தன் விவரப் பட்டியல்**

| | | |
|---|---|---|
| **பெயர்** | - | XXX |
| **பிறந்ததேதி** | - | 01.01.1990 |
| **கல்வித்தகுதி** | - | பி.காம். |
| **தொழில்தகுதி** | - | தமிழ், ஆங்கிலம் – உயர்நிலை<br>தட்டச்சு முதல் வகுப்பில் தேர்ச்சி<br>எம்.சி.ஏ., |
| **அனுபவம்** | - | 5 ஆண்டுகள் |
| **தெரிந்த மொழி** | - | தமிழ், ஆங்கிலம், கன்னடம், மலையாளம் |
| **தொடர்பு முகவரி** | - | விண்ணப்பத்தில் உள்ளது. (அல்லது) abcd@gmail.com |

# குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுதல்

**வினா எண் 41**

**(10 மதிப்பெண்)**

(இக்கட்டுரையில் உள்ள பத்திகளில் உள்ள முக்கியமான வார்த்தைகளைக் கருப்பு மையில் எழுதலாம். **கற்றல் குறைந்த மாணவர்கள் ஒவ்வொரு கட்டுரையிலும் உள்ள உட்தலைப்பை மாற்றாமல் அதில் உள்ள கருத்துகளைச் சுருக்கமாக எழுதினால்போதும்**. ஒவ்வொரு உட்தலைப்பிற்குள்ளும் ஒன்று, இரண்டு கருத்துகள் அமைந்தபடி எழுதினால்போதும்.)

## காலத்தை வெல்லும் கணினி

*முன்னுரை*
*கணினியின் தோற்றம்*
*கணினியின் வளர்ச்சி*
*கணினி வகைகள்*
*இணைய வகைகள்*
*இணையதள வசதி*
*கணினிவழிக் கல்வி*
*கணினி வியத்தகு சாதனைகள்*
*கணினி பயன்படும் துறைகள்*
*உலகம் உள்ளங்கையில்*
*முடிவுரை*

### முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பு கணினி. மனித மூளையையும் விஞ்சும்படி, **ஒரு நொடியில் மில்லியன் கணக்குகளையும்** செய்துகாட்டும். அத்தகைய கணினியைப் பற்றிக் காண்போம்.

### கணினியின் தோற்றம்

கணக்கிடும் **மணிச்சட்டகமே** கணினி தோன்றுவதற்கான முதற்படி. பலவித சிந்தனைகளுக்குப் பிறகு, இங்கிலாந்தைச் சேர்ந்த **சார்லஸ் பாப்பேஜ்** என்பவர் கணினியை வடிவமைத்தார். கட்டளைகளை வடிவமைத்தவர் **லேடி லவ்லெஸ்** என்பவர் ஆவார்.

### கணினியின் வளர்ச்சி

**ஹார்வார்டு** என்பவர் எண் இலக்கக் கணினியைக் கண்டுபிடித்தார். அமெரிக்கா, ஜப்பான் நாடுகள் மீத்திறன் கணினியைக் கண்டுபிடித்தன.

### கணினி வகைகள்

தற்போது கணினியானது கையடக்க கணினி, ஏடுக்கணினி என பலவித மாற்றமாகி வருகிறது. சூப்பர் கணினி என்பது போய், **பெர்சனல் கம்ப்யூட்டர்** வந்துவிட்டது.

### இணையம்

இன்று இணையம் தகவல் தொடர்பில் முக்கியமான பங்கு வகிக்கிறது. **ஜான்பாஸ்டல்** என்பவரே இணையத்திற்கு வித்திட்டவர். **மின்காந்த நாடா, ஈதர்நெட் அட்டை, அகன்ற வலைபரப்புப் பின்னல்** என்பதைக் கடந்து, இன்று உலகம் முழுவதையும் செயற்கைக்கோளால் இணைத்து, உலக விரிவு வலை என்று மாறிவிட்டது.

### இணைய வகைகள்

**குறும்பரப்பு வலைப்பின்னல் (LAN), அகன்ற பரப்பு வலைப்பின்னல் (WAN), வையக விரிவு வலை** (WWW) என இணையம் பல வகையாகிறது.

### இணையதள வசதி

கிராமங்களில் நகரங்களில் சேவையாளரிடம் தனி கணக்குப் பெற்று இணையதளவசதி பயன்படுத்தப்படுகிறது. **கணினி, தொலைபேசி, தொடர்பு மென்பொருள் ஆகியவற்றில் இணையதளவசதி** உள்ளது. நமது அரசாங்கம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளிகளில் இணைய வசதி ஏற்படுத்தி உள்ளது. கரும்பலகையில் கற்றல் என்பது கணினியில் கற்றல் ஆகும்படி இணையவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. **2ஜி, 3ஜி** அலை கற்றைகளில் இணையதள வசதி உருவாகிவுள்ளது.

**கணினி வழிக் கல்வி**

கணினி வழியாகக் கற்பிக்கப்படும் கல்வி இதுவாகும். பள்ளி, கல்லூரியில் மருத்துவம், பொறியியல், வானியல், மென்பொருள் கல்வி எனப் பல துறைகளில் கல்வியானது கணினி வழி போதிக்கப்படுகிறது. கணினி வழியாக **எடுசாட்** என்ற நுட்பத்தில் கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவர்கள் பயன்பெறும் வகையில் கரும்பலகையில் கற்றல் என்கிற மரபு மாறி, கணினியில் கற்றல் என்ற நவீனம் தற்போது உருவாகியுள்ளது.

**கணினியின் வியத்தகு சாதனைகள்**

கணினியானது ஒரு நொடியில் மில்லியன் கணக்குகளைச் செய்துகாட்டுகிறது. **வான்வெளி, கடலாய்வு** ஆகியவற்றில் இதன் பங்கு முக்கியமானது. இன்றைய தகவல் தொழில்நுட்பத்துறைக்கு இதயமாகச் செயல்படுகிறது.

**கணினி பயன்படும் துறைகள்**

கணினி பயன்பாட்டுக் கருவியில் ஓர் அங்கம். **மருத்துவம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம், வானியல், ஆழ்கடலியல், மளிகைக் கடைகள், கல்வி நிறுவனங்கள்** எனப் பலவற்றிலும் கணினி செயல்படுகிறது.

**உலகம் உள்ளங்கையில்**

**அலைபேசி, கையடக்க கணனி** என அமைந்த கணினியால் உலகம் உள்ளங்கையில் அமைந்துவிட்டது. கையில் இருக்கும் கணினி தனக்குள் உலகத்தை வைத்து, **தகவலை அளிக்கும் அமுதசுரபியாக** உள்ளது.

**முடிவுரை**

**பழையன கழிதலும் புதியன புகுதலும்** என்கிற சொல்லுக்கேற்றபடி, கணினியை நல்வழிக்குப் பயன்படுத்தி. மனித குலத்தை முன்னேற்றுவோம்.

**மழை நீர் சேகரிப்பு**

| |
|---|
| *முன்னுரை* |
| *நீரின்றி அமையாது உலகம்* |
| *நீர் நிலைகளின் அடிப்படைகள்* |
| *நீர் பற்றாக்குறை* |
| *நீரைச் சேமிக்கும் வழிகள்* |
| *மழைநீர் சேமித்தல்* |
| *நிலத்தடி நீரைச் சேமித்தல்* |
| *மரம் வளர்ப்போம்* |
| *மழை பெறுவோம்* |
| *முடிவுரை* |

**முன்னுரை**

ஐம்பூதங்களில் ஒன்றானது நீர். இந்த உலகின் பெரும்பகுதி நீரால் சூழ்ந்துள்ளதுபோலவே மனித வாழ்வும் நீரால் அமைகிறது. மழையே அமுதம் என்கிறது இலக்கியம். அத்தகைய மழைநீரைச் சேகரிப்பது பற்றிக் கீழே காண்போம்.

**நீரின்றி அமையாது உலகம்**

திருவள்ளுவர் மழையை முன்வைத்து **வான்சிறப்பு** எழுதியுள்ளார். த்தகைய நீரில் மழைநீர் முக்கியமானது. மழை நீர் ஒன்றே யாவற்றிற்கும் அடிப்படையாகிறது. இதனால்தான் திருவள்ளுவர் “**நீரின்றி அமையாது உலகு**” என்றார்.

**நீர் நிலைகளின் அடிப்படை**

**குளம், குட்டை, ஏரி** ஆகியவற்றிற்கு நதிகள் அடிப்படை. கிணறு, நீர் ஊற்றிற்கு நிலத்தடி நீரே அடிப்படை. மழை நீர், பருவக் காலத்திற்கான விவசாயத்திற்கும் இயற்கை வளர்ச்சிக்கும் அடிப்படை.

**நீர் பற்றாக்குறை**

தமிழகம் மட்டுமல்லாமல், உலகெங்கும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆற்றின் நீர் நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பங்கிடாமல் போனதாலும், கிடைக்கின்ற நீரைச் சேமிக்காமல் விட்டதாலும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. **குடிநீருக்காக வெகுதொலைவில்** செல்லும் கிராமங்களும் உண்டு. சீமைக் கருவேல மரங்கள் நீரை உறிஞ்சி விடுவதால் நிலத்தடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுகிறது.

**நீரைச் சேமிக்கும் வழிகள்**

கிராமங்களில் அங்கங்கே **குளம், குட்டை** வெட்டி ஆற்றுநீரைச் சேமிக்கலாம். இதனால் கடலில் கலக்கும் நீரை வீணாக்குவது குறையும். நகரங்களில் நீரை வீணாக்காமல் பயன்படுத்திச் சேமிக்கலாம். அங்கங்கே பெரிய **நீர்சேமிக்கும் கலன்களை** உருவாக்கிச் சேமிக்கலாம். சேமிக்கும் நீரைச் சுத்தகரிப்பு செய்து பயன்படுத்தலாம்.

<u>**மழைநீர் சேமித்தல்**</u>

பெய்யும் **மழையைச் சேகரிப்பதே மழைநீர் சேகரித்தல்** எனப்படும். பருவத்திற்குப் பெய்யும் மழையைச் சேமிக்க பல திட்டங்கள் உள்ளன.

1. மொட்டை மாடியில் விழும் மழைநீரைக் குழாய்கள் மூலம் தரைப்பகுதிக்குக் கொண்டுவரவேண்டும். அதனை மழைநீர்த் தொட்டியில் சேகரிக்கவேண்டும். அங்கு வடிகட்டி, திறந்தவெளிக் கிணற்றில் சேர்க்கவேண்டும்.
2. திறந்தவெளிக் கிணறு இல்லாத வீட்டில், மழைநீரை வடிகட்டும் தொட்டிக்குள் வடிகட்டி, குழாய்க்கிணற்றுக்குள் செலுத்தலாம்.

<u>**மரம் வளர்ப்போம்**</u>

மழை வருவதற்கு முக்கிய காரணமே மரங்கள் ஆகும். இன்று மனிதகுலம் தன் விருப்பமான வாழ்விற்காகக் காட்டை அழிக்கிறது. **மரமே ஓசோன் பாதிப்பை ஒழிக்கிறது**. எனவே மரம் வளர்ப்போம். ஒரு வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்பதன் வழியாக, நாடு முழுவதும் மரம் பரவிவிடும். மழையைப் பெற இதனைவிடச் சிறந்த வழி ஏதும் இல்லை. **மரத்தை வளர்ப்பது நம் உலகத்தின் ஆயுளைக் கூட்டுவதாகும்**.

<u>**மழை பெறுவோம்**</u>

காடு நிறைந்த பகுதிகளில் மழை அதிகமாகப் பெய்கிறது. உதாரணத்திற்குக் **கேரளாவும் அசாமும்** அதிக மழை பெறுகின்றன. ஏனெனில அங்கே காடுகள் நிறைந்திருக்கின்றன.

நாம் வளர்க்கும் ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு மழைமேகத்திற்குச் சமமானது. ஒவ்வொரு மரத்தின் இலையும், ஒவ்வொரு மழைத்துளிக்குச் சமமானது. **“காடு உயர நாடு உயரும்”** என்ற வாக்கின்படி, மழையைப் பெற்று, மண்வளம் காத்து, மனித குலத்தை உயர்த்துவோம்.

<u>**முடிவுரை**</u>

**மழை நீர்**
**நம்**
**உயிர் நீர்**

என்னும் உண்மையினை ஏற்று மழைநீரைச் சேகரித்து, நீரின்றி அமையாது உலகம் என்பதைப் பறைசாற்றுவோம். வருடாவருடம் மழைபெய்யும் அளவை அதிகப்படுத்துவோம்.

**நூலகம்**

*முன்னுரை*
*நூல்களின் தோற்றம்*
*பண்டைய நிலை*
*நூலகத்தின் வேறு பெயர்கள்*
*பொது நூலகத் துறை*
*பள்ளியும் நூலகமும்*
*நூலகமும் பயன்பாடும்*
*நூலகத்தின் நன்மைகள்*
*முடிவுரை*

<u>**முன்னுரை**</u>

நூல்கள் அமைந்துள்ள இடமே நூலகம். அது **அறிவுப் பெட்டகம்**. பல்வேறு துறை நூல்கள் வாழும் இடமே நூலகம். மனித மூளையின் பிறப்பிடமே நூலகம்தான். அத்தகைய நூலகத்தைப் பற்றிக் காண்போம்.

<u>**நூல்களின் தோற்றம்**</u>

பழங்காலத்தில் கற்பாறைகள், **களிமண்பலகைகள், மரப்பட்டைகள், தோல்கள், துணிகள், பனை ஓலைகள்** பயன்படுத்தி எழுதிப் பாதுகாத்தனர். **பாபிலொனியாவில்** உள்ள நிப்பூர் கிராமத்தில் கி.மு.2000 ஆண்டிற்கு முந்தைய சுமார் 2500 **களிமண்பலகைகளில்** எழுதப்பட்ட நூல்களின் தொகுப்பு கண்டெடுக்கப்பட்டது. இதனை **உலகின் முதல் நூலாகக்** கொள்ளலாம்.

<u>**பண்டைய நிலை**</u>

பண்டைய காலத்தில் எழுத்தறிவு குறைவே. அரண்மனைகளிலும் மடங்களிலும் கோவில்களிலும் மட்டுமே நூல்கள் இருந்தன.

**நூலகத்தின் வேறு பெயர்கள்**

**புத்தகச்சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசகசாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம்** எனப் பல பெயர்கள் நூலகத்திற்கு உண்டு. **இலத்தீனில் லிப்ரா என்பதே, ஆங்கிலத்தில் லைப்ரரி** ஆனது. தமிழில் நூலகம் எனப்படுகிறது.

**பொது நூலகத் துறை**

நூலகமில்லாத ஊரில் அறிவு பாழ் என்பது புதுமொழி. ஓர் அரசின் தலையாய கடமை, மக்களை அறிவில் சிறந்தவராக்குவதாகும். ஊர்தோறும் நூலகம் என்ற குறிக்கோளில் **அரசு பொது நூலகத்துறை** உருவானது. தமிழக அரசு **1948இல் சென்னைப்பொது நூலகச் சட்டத்தை உருவாக்கி**, நூலகப் பணிகளைச் சீரான செயல்பாட்டில் இயக்குகிறது. தமிழகத்தில் **மாவட்ட மத்திய நூலகம், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம், பகுதி நேர நூலகம், நடமாடும் நூலகம்** எனப் பரந்து விரிந்துள்ளது. இதற்கு பொது நூலகத்துறையே காரணம் ஆகும். ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக்குழுவும் அந்தந்த மாவட்டத்தின் நூலகங்களைக் கவனத்தில் கொள்கிறது.

**பள்ளியும் நூலகமும்**

தற்காலத்தில், பள்ளிகளில் நூலகம் நன்றாகச் செயல்படுகிறது. **புத்தகப் பூங்கொத்து** என்ற திட்டம், ஒவ்வொரு வகுப்பறையிலும் செயல்படுகிறது. தினமும் **மாணவர்கள் நூலை வாசித்துப் பயனடைகின்றனர்**. ஓய்வு வேளையிலும், பள்ளி முடிந்த பின்பும் மாணவர்கள் பள்ளியில் உள்ள நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். **பாடத்திற்குத் தொடர்பான செய்திகளை அறிந்துகொள்ள** பள்ளி நூலகம் பயன்படுகின்றது.

**நூலகமும் பயன்பாடும்**

**அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், மேற்பார்வை நூல்கள், வாசிப்புக் கடன்** நூல்கள் என நூலகம் பயன்படுகிறது. தினச் செய்தித்தாள்கள், வாரந்திர, மாத இமழ்கள் நமக்குப் பயன்படுகின்றன. இலக்கியம், இலக்கணம், திறனாய்வு, தத்துவம், அறிவியல், கணிதம், வரலாறு, பொருளியல், வாணிகம், மருத்துவம், கலை, மொழிபெயர்ப்பு, பொது அறிவு எனப் பல துகைளில் நூல்கள் உள்ளன. தமிழ், ஆங்கில வழியில் அமையும் இந்நூலகம் வயது வரம்பின்றி அனைவருக்கும் பயனளிக்கிறது. அங்கிருந்தபடி வாசிக்கவும் குறிப்பெடுக்கவும் உதவுகிறது.

தற்போது நூலகங்கள், **நூல்களை மின்னணுவாக்கும்** பணியைத் தொடங்கிவிட்டன. **இணையத்தள நூலகம், குறுவட்டு, மின்னணு ஒளிவட்டு, நுண்சுருள்** எனப் பல வடிவங்களில் நூல்கள் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப் படுகின்றன.

**நூலகத்தின் நன்மைகள்**

வெவ்வேறு துறைசார்ந்த நூல்களும், அகராதிகளும், மேற்பார்வை நூல்களும் நிரம்பிய நூலகம், மனிதனை மேம்படுத்துபவை. அன்றாட வாழ்வுக்குத் தேவையான அறிவைத் தரும் ஆசான். பள்ளிப் பாடநூல்களில் குறிப்பிடப்படும் அனைத்துச் செய்திகளுக்கும் தொடர்பான பல செய்திகளை நூலகம் அளிக்கிறது. ஒரு புத்தகத்தை வாங்க இயலாத மாணவர்கள், பல புத்தகங்களை இலவசமாக நூலகத்தில் வாசிக்கலாம்.

முடிவுரை

**“ஒரு மனிதன் ஆண்டுக்கு 2000 பக்கங்களாவது படித்தால்தான் அன்றாட உலக நடப்புகளை அறிந்த மனிதனாகக் கருதப்படுவான்” என்று யுனெஸ்கோ** கூறுகிறது. எனவே நாமும் தினம் பத்து பக்கங்களாவது படித்து, நூலைப் பயன்படுத்தி நம்மை அறிவாளி ஆக்குவோம்.

**சுற்றுப்புறச் சூழல்**

*முன்னுரை*
*மாசுக் கட்டுப்பாடு*
*இயற்கையை அழித்தல்*
*காற்றுமாசும் நச்சுப்புகையும்*
*நீர் மாசு*
*ஒலி மாசு*
*நரம்பு மண்டல பாதிப்பு*
*கட்டுப்படுத்தும் வழிகள்*
*முடிவுரை*

**முன்னுரை**

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்** என்றனர் நம் முன்னோர். உலகோர் அனைவரும் நலமாய் வாழச் சுற்றுச் சூழல் மாசுபடாமல் இருத்தால் அவசியம். அதனைப் பாதுகாக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். இக்கட்டுரையில் கட்டுப்பாடு, இயற்கையை அழித்தல், மாசு வகைகள், கட்டுப்படுத்தும் வழிகள் பற்றிக் காண்போம்.

**மாசுக் கட்டுப்பாடு**

நம்மைச் சுற்றியுள்ள **மாசுகளைக் கட்டுப்படுத்துவதே மாசுக் கட்டுப்பாடு** எனப்படும். உணவுப் பொருள் உற்பத்தியில், வேதியியல் பொருள்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டும். வேளாண்மையில் அமையும் ரசாயனத்தைக் கட்டுப்படுத்தவேண்டும். ப்ளாஸ்டிக் கலாச்சாரத்தை முழுவதுமாய்த் தவிர்ப்பதே நல்லது.

**இயற்கை அழித்தல்**

இயற்கை என்பது மனிதனுக்கு அளிக்கப்பட்ட கொடை. நம்முடைய பேராசைக்காகக் காட்டை அழிப்பது, நம் எதிர்காலத்தையே அழிப்பதற்குச் சமம். **வீட்டிற்குத் தேவையான மரஙகளைச் சமூகக் காட்டிலிருந்து பயன்படுத்தவேண்டும்.** இயற்கையை அழிப்பதால், அதிலிருந்து நமக்குக் கிடைக்கும் **பாதுகாப்பு இல்லாமல்** போய்விடுகிறது. காடுகள் இருந்தால் தான் **மேகங்கள் உருவாகும். காற்று சுத்தமாகும்**. மழை வரும். மரங்கள் இல்லையேல் மழை இல்லை.

**காற்று மாசும் நச்சுப்புகையும்**

நல்ல காற்று நச்சு காற்றாக மாறக் காரணம் மாசுதான். இந்த மாசு மனிதர்களால் உருவாக்கப்பட்டது. **வாகனஙகளில், தொழிற்சாலைகளில்** இருந்து வெளியேறும் **நச்சுப்புகை,** காற்றுமண்டலத்தைப் பாதிப்படையச் செய்கிறது. காற்றின் தூய்மை கெடுகிறது. சுவாசிக்கும் **நமக்கு நுரையீரல் சிக்கல்** எழுகிறது.

**நீர் மாசு**

நீரில் ஏற்படும் மாசை நீர்மாசு என்கிறோம். அன்றாடம் நாம் பயன்படுத்தும் **குளம், குட்டைகளில் குப்பைகள் சேர்வதால், நீர் மாசுப்பட்டுத் தோல்நோய்கள்** உருவாகின்றன. மட்டுமல்லாது, வீட்டின் கழிவுநீர் நிலத்தில் கலப்பதால் நீரின் தன்மை மாறுகிறது. **சாயப்பட்டறைகள், தோல்தொழிற்சாலைகளில் வெளியாகும் இரசாயன கழிவுநீர்** ஆற்றில் கலப்பதால், **ஆற்று நீர் வளம், மண் வளம் கெட்டுவிடுகிறது**. இக்கழிவுநீர் மனிதனுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தி, அவனுடைய உயிருக்கு உலை வைத்துவிடுகிறது. நன்னீர் கெடுநீர் ஆவதால், ஒட்டுமொத்த சமூகமும் மாசு நீரால் பாதிப்படைகிறது.

**ஒலி மாசு**

நமக்குக் கேட்கும் ஒலி அளவு கடந்து அமையும் ஒலியே ஒலிமாசு எனப்படும். மனிதனின் **காது 120 டிசிபிள் அளவே கேட்கும்** திறன் வாய்ந்தது. அதறகுமேற்படும்போது, காது கேட்கும் திறன் இல்லாமல் போகிறது. ஒலிப்பெருக்கி. **வாகனங்கள், தொழிற்சாலைகள் வெளியிடும் சப்தத்தால்** ஒலி மாசு அடைகிறது.

**நரம்பு மண்டலம் பாதிப்பு**

அதிக ஒலி கேட்பதால் நரம்பு மண்டலம் பாதிப்படைகிறது. கேட்கும் சக்தியைக் கடந்து ஒலிக்கும் பேரிரைச்சலால் காதின் கேட்புத்திறனில் அமையும் **நரம்புமண்டலம பாதிப்படைந்து**, கேட்கும்திறன் குறைகிறது. அது மட்டுமல்லாது, அதிக சப்தம் **மனஎழுச்சியை அதிகப்படுத்தி, சிந்தனைத் திறனைக் குறைக்கிறது**. இரத்தத்துடிப்பு, மூச்சிழுத்தல், இரத்த அழுத்தம் ஆகியவற்றில் பெருத்த வேறுபாடு ஏற்பட்டு, நோய்கள் உருவாகின்றன. நரம்பு மண்டலம் பாதிப்படையும்போது மனிதனின் வாழ்வும் சீரழிகிறது.

**கட்டுப்படுத்தும் வழிகள்**

1. சுற்றுப்புறச் சூழலைக் கெடுக்கும் காரணிகளைக் கண்டறிந்து, **மாற்று வழிகளைக்** கண்டுபிடிக்கவேண்டும்.
2. மரங்களை, **காடுகளை அழிக்கக்கூடாது**.
3. **நீர் ஆதார வளங்களை உருவாக்கிப்** பாதுகாக்கவேண்டும்.
4. **கழிவுகளை** இயற்கை **உரமாக்க**வேண்டும்.
5. இரசாயனக் கழிவுகளைச் **சுத்தகரிப்புச்** செய்து, மறு சுழற்சி செய்யவேண்டும்.

**முடிவுரை**

மனநலம், உடல்நலம் சரியாக அமைய சுற்றுச்சூழல் முக்கிய பங்கு வகிப்பதால், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவேண்டும். மனிதர்களுக்கு மட்டும் என்று, **பறவைகளுக்கு, விலங்குகளுக்கு, தாவரங்களுக்கு** எனறு அமையும் சூழலை உருவாக்கவேண்டும். புறச்சூழலைக் **கெடுக்கும் காரணிகளை நாம் பயன்படுத்தாமல்** இருக்கவேண்டும்.

## தமிழ் இரண்டாம் தாள் முடிந்தது

## தேர்ச்சி அடைய பயிற்சி தரவேண்டிய பகுதிகள்

### தமிழ் முதல் தாள்

| | | |
|---|---|---|
| 1. | உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | 6 |
| 2. | கோடிட்ட இடம் நிரப்புதல் | 6 |
| 3. | பொருத்துக | 4 |
| 4. | வினா அமைக்க | 4 |
| 5. | குறுவினாக்கள் – செய்யுள்பகுதி | 10 |
| 6. | குறுவினாக்கள் – உரைநடைப் பகுதி | 10 |
| 7. | சிறு வினாக்கள் (செய்யுள்) | 8 |
| 8. | சிறு வினாக்கள் (உரைநடை) | 8 |
| 9. | மனப்பாடப்பகுதி (திருக்குறள் மட்டும்) | 4 |

### தமிழ் இரண்டாம் தாள்

| | | |
|---|---|---|
| 1. | உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் | 5 |
| 2. | கோடிட்ட இடம் நிரப்புதல் | 5 |
| 3. | சுருக்கமாக விடையளித்தல் (மொழிப் பயிற்சி) | 10 |
| 4. | அணி | 5 |
| 5. | ஆங்கிலச்சொல், அரபு எண் தமிழாக்கம் | 5 |
| 6. | கவிதை எழுதுதல் | 5 |
| 7. | பா நயம் | 5 |
| 8. | படிவம் | 5 |
| 9. | சூழல் வினா விடை | 5 |
| 10. | கடிதம் | 10 |

தமிழ் முதல் தாளில் 60 மதிப்பெண்ணிற்கும், இரண்டாம் தாளில் 60 மதிப்பெண்ணிற்கும் பயிற்சி அளித்தால் மாணவர் கண்டிப்பாகத் தேர்ச்சி அடைவது உறுதி. அதை ஆசிரியர்கள் பயிற்சித் தேர்வாக வைத்துக் கோப்பாக மாற்றிக்கொள்வது நலம். மாணவர்களும் இதைப் பயிற்சி செய்து கோப்பாக வைத்துக் கொள்வது நலம் தரும்.

## பொதுத் தேர்வில் தேர்ச்சி அடைய
## வாழ்த்துகள்!